பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 01 ஞாயிற்றுக்கிழமை 17.11.2019 கதிர் 12

### இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி என்ற முறையில் நாட்டுமக்களுக்குத்தாம் ஆற்றிய இறுதி உரையிலும் கூட குசும்பு பண்ணி விட்டுத்தான் செல்கிறார் மைத்திரியார்.

'எட்டாப் பழம் புளிக்கும்' என்ற மாதிரிக் கதை விட்டிருக்கின்றார் அவர். பக்கம் 02

# கோட்டா முன்னிலை!

## தமிழர் தாயகத்தில் சஜித்



கொழும்பு, நவ 17

நேற்று நடைபெற்ற இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்குகள் நேற்று மாலை முதல் எண்ணத் தொடங்கிய நிலையில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி பெரும்பாலும் உறுதியென இன்று விடிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன. வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப் பகுதிகளில் நினைக்க முடியாத பெருவெற்றியை புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ பெற்று வருகின்றபோதிலும் தென்னிலங்கைப் பின்னடைவு அவருக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையோடே கோட்டாவின் வெற்றி உறுதியாகும் என்று கூறும் திசையை நோக்கி வாக்கு எண்ணிக்கைகள் சென்றுகொண்டிருப்பதாக இன்று அதிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## வடக்கு, கிழக்கில் கோட்டாவுக்கு 10 வீத ஆதரவு கூட இல்லை

கொழும்பு,நவ.17

இன்று அதிகாலை வெளியான முடிவுகளின்படி வெற்றி வேட்பாளர் கோட்டபய ராஜபக்ஷவுக்கு வடக்கு, கிழக்கில் பெரும்பாலான இடங்களில் 10 சதவீத வாக்குகள் கூட கிடைக்கவில்லை. அனேகமாக எல்லா இடங்களிலும் புதிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 85 வீத வாக்குகளை அள்ளியெடுத்தார்.

எனினும் தென்னிலங்கையில் ஏற்பட்ட பின்னடைவு இத்தேர்தலில் அவரின் வெற்றி வாய்ப்பை அடியோடு சரித்துவிட்டதாக முற்கொண்டு கிடைத்த பக்கம் 03

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 66.58 வீதம் வாக்குப்பதிவு

யாழ்ப்பாணம், நவ. 17

ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 66.58 வீதம் வாக்களிப்பு பதிவாகியுள்ளதாக யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகர் என்.வேதநாயகன் தெரிவித்தார். பக்கம் 03

## ஜனாதிபதிப் பதவியிலிருந்து மைத்திரி முழுத் திருப்தியுடன் விலகுகின்றாரம்!

### நாட்டு மக்களுக்கு அவர் நேற்று மாலை உரை



கொழும்பு,நவ.17

தனது பதவிக்காலம் குறித்த திருப்தியுடன் தாம் ஓய்வு பெற்று செல்கிறார் எனத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. நேற்று நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்றாலும், மக்களுக்கான தனது கடமையைத் தாம் தொடரப் போகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று நாட்டு பக்கம் 03

## பதவி விலகத் தயாராகின்றார் தேர்தல் ஆணையத் தலைவர்



கொழும்பு,நவ.17

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவராகத் தான் கலந்துகொள்ளும் இறுதி ஊடக வியலாளர் சந்திப்பாக இது இருக்கலாம் என நேற்று மாலை தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த பக்கம் 03

## அமைதியான தேர்தல்!

### கண்காணிப்பாளர்கள் திருப்தி

கொழும்பு, நவ. 17

தேர்தலில் 300 இற்கும் அதிகமான சர்வதேச கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் எனவும், அவர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு அமைய இந்த ஜனாதிபதித் தேர்தல் பக்கம் 03

## நீதி, சுதந்திரமான தேர்தல்: 19 ஆம் திருத்தத்தின் வெற்றி

### பிரதமர் ரணில் புளகாங்கிதம்



கொழும்பு,நவ.17

சுதந்திரமான, நீதியான ஒரு தேர்தலை உருவாக்குவதற்கு 19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சமுகமளித்து ஆணைக்குழுத் தலைவருடன் தாம் பக்கம் 03

## மதவாச்சியில் வைத்து தாக்கப்பட்ட அரச பஸ்

### மன்னாரில் வாக்களித்துவிட்டு திரும்பியோரில் 2 பேர் காயம்



வவுனியா, நவ. 17

மன்னாரில் வாக்களித்துவிட்டு புத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் மீது மதவாச்சிப் பகுதியில் பக்கம் 03

## புதிய ஜனாதிபதியின் பெயர் நாளை மாலை வெளியாகும்

### தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 17

புதிய ஜனாதிபதியின் பெயர் நாளை திங்கட்கிழமை மாலை அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். பக்கம் 03

# இன்று அதிகாலை வரை வந்த முடிவுகள்

## நல்லூர் தேர்தல் தொகுதி

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| SAJITH PREMADASA ✓ | 27,605 | 86.02% |
| GOTABAYA RAJAPAKSA | 1,836 | 5.72% |
| M. K. SHIVAJILINGAM | 659 | 2.05% |
| ARIYAWANSHA DISSANAYAKE | 475 | 1.48% |
| ANURA KUMARA DISSANAYAKA | 166 | 0.52% |

REGISTERED 46,888 | TOTAL POLLED 32,941 | VALID 32,093 | REJECTED 848

## அம்பலாங்கொட தேர்தல் தொகுதி

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| GOTABAYA RAJAPAKSA ✓ | 41,528 | 65.78% |
| SAJITH PREMADASA | 17,793 | 28.19% |
| ANURA KUMARA DISSANAYAKA | 2,480 | 3.93% |
| MAHESH SENANAYAKE | 234 | 0.37% |
| AJANTHA PERERA | 156 | 0.25% |

REGISTERED 75,507 | TOTAL POLLED 63,654 | VALID 63,129 | REJECTED 525

## வன்னி மாவட்டம் - தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| SAJITH PREMADASA ✓ | 8,402 | 79.30% |
| GOTABAYA RAJAPAKSA | 1,703 | 16.07% |
| ANURA KUMARA DISSANAYAKA | 147 | 1.39% |
| M. K. SHIVAJILINGAM | 144 | 1.36% |
| ARIYAWANSHA DISSANAYAKE | 48 | 0.45% |

REGISTERED 10,994 | TOTAL POLLED 10,742 | VALID 10,595 | REJECTED 147

## மொனராகலை மாவட்டம் - தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| GOTABAYA RAJAPAKSA ✓ | 13,754 | 63.42% |
| SAJITH PREMADASA | 6,380 | 29.42% |
| ANURA KUMARA DISSANAYAKA | 1,340 | 6.18% |
| MAHESH SENANAYAKE | 79 | 0.36% |
| ROHAN PALLEWATTA | 23 | 0.11% |

REGISTERED 22,330 | TOTAL POLLED 22,021 | VALID 21,687 | REJECTED 334

## காலி மாவட்டம் - தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| GOTABAYA RAJAPAKSA ✓ | 25,099 | 67.49% |
| SAJITH PREMADASA | 9,093 | 24.45% |
| ANURA KUMARA DISSANAYAKA | 2,450 | 6.59% |
| MAHESH SENANAYAKE | 301 | 0.81% |
| DUMINDA NAGAMUWA | 52 | 0.14% |

REGISTERED 38,045 | TOTAL POLLED 37,585 | VALID 37,192 | REJECTED 393

## கம்பகா மாவட்டம் - தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| GOTABAYA RAJAPAKSA ✓ | 30,918 | 65.37% |
| SAJITH PREMADASA | 12,125 | 25.64% |
| ANURA KUMARA DISSANAYAKA | 3,181 | 6.73% |
| MAHESH SENANAYAKE | 700 | 1.48% |
| ROHAN PALLEWATTA | 143 | 0.30% |

REGISTERED 48,614 | TOTAL POLLED 48,102 | VALID 47,296 | REJECTED 806

## இரத்தினபுரி மாவட்டம் - தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| GOTABAYA RAJAPAKSA ✓ | 19,061 | 65.72% |
| SAJITH PREMADASA | 7,940 | 27.37% |
| ANURA KUMARA DISSANAYAKA | 1,678 | 5.79% |
| MAHESH SENANAYAKE | 183 | 0.63% |
| ROHAN PALLEWATTA | 23 | 0.08% |

REGISTERED 29,716 | TOTAL POLLED 29,383 | VALID 29,005 | REJECTED 378

## திருகோணமலை மாவட்டம்-தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| SAJITH PREMADASA | 7,871 | 56.79% |
| GOTABAYA RAJAPAKSA | 5,089 | 36.72% |
| ANURA KUMARA DISSANAYAKA | 610 | 4.40% |
| M. L. A. M. HIZBULLAH | 74 | 0.53% |
| M. K. SHIVAJILINGAM | 49 | 0.35% |

REGISTERED 14,148 | TOTAL POLLED 14,021 | VALID 13,860 | REJECTED 16

## மாத்தளை மாவட்டம்-தபால் மூல வாக்களிப்பு

| Candidate | Votes | % |
| --- | --- | --- |
| GOTABAYA RAJAPAKSA | 13,405 | 64.43% |
| SAJITH PREMADASA | 6,165 | 29.63% |
| ANURA KUMARA DISSANAYAKA | 987 | 4.74% |
| MAHESH SENANAYAKE | 113 | 0.54% |
| ARIYAWANSHA DISSANAYAKE | 17 | 0.08% |

REGISTERED 21,294 | TOTAL POLLED 21,068 | VALID 20,807 | REJECTED 261

# சில மாவட்டங்களின் முடிவுகள் தாமதமாகும்


கொழும்பு,நவ.17

இரத்தினபுரி, பதுளை, கேகாலை மாவட்ட முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்படலாமெனதேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடும் மழை, வெள்ளம் காரணமாக வாக்குப்பெட்டிகளை வாக்களிப்புமையங்களிற்கு கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அப்பகுதி முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் ஆகலாமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமூக வலைத்தளங்களில் வெளியாகும் தகவல்களை நம்ப வேண்டாமென்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் தேர்தல்கள் ஆணையாளர்.

# கோட்டா மீது வழக்குத் தொடுத்த பேராசிரியர் நேற்று தப்பி ஓட்டம்!



பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் குடியுரிமையை சவாலுக்குட்படுத்தி வழக்கு தாக்கல் செய்திருந்த பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர நாட்டை விட்டு வெளியேறியுள்ளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமையை சவாலுக்கு உட்படுத்தி பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதற்கு எதிராக சிலதினங்களுக்கு முன்னர் அவர் உயர் நீதிமன்றத்தில் மேன்முற்சியீடு செய்திருந்தார்.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் நேற்று நடைபெற்ற நிலையில், பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளிநாட்டிற்கு செல்லும் புகைப்படம் மற்றும் வீடியோ காணொலி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

# தம்பிராசா தாக்கப்பட்டார்!



கொழும்பு, நவ. 17

ஜனாதிபதி வேட்பாளர் எம். கே.சிவாஜிலிங்கத்தின் இணைப்பாளர் மு.தம்பிராசா மீது இனத் தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்றநிலையில், காரைநகரில் தனது வாக்குரிமையைப் பயன்படுத்த தம்பிராசா சென்றவேளை, இனந்தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலில் அவர் காயமடைந்துள்ளார்.

பிரதான அரசியல் கட்சியொன்றின் குழுவொன்றே தன் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகக் குற்றச்சாட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தம்பிராசா தெரிவித்தார். (ஐ-07)

# இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தான் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் கண்டி சிறிதலதா மாளிகையிலிருந்து நாட்டு மக்களுக்குத் தாம் உரையாற்றினார் என்று குறிப்பிட்ட அவர், அப்போது தாம் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று உறுதி கூறியமையை நினைவூட்டினார். அந்த உறுதியுரையின்படி தாம் நடந்து கொண்டிருக்கிறார் என்று தம்மைத் தாமே பீற்றிக்கொள்ள முயன்றிருக்கின்றார் அவர்.

ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு இன்னொரு தடவை ஜனாதிபதியாக அவர் எவ்வளவு தூரம் துடியாய்த் துடித்தார், விடாது முயன்றார் என்பவை எல்லாம் மக்களுக்கு நன்கு தெரியும். அப்படி மக்களுக்கு எல்லாம் தெரியும் என்பது மைத்திரியாருக்கும் தெரியும்.

மக்களுக்கு இதெல்லாம் தெரியாது என்று தமக்குத் தாமே கற்பிதம் பண்ணிக்கொண்டு, மக்கள் காதில் தாம் பூச்சுற்றுகின்றார் என எண்ணியபடி, அவர் தமக்குத் தாமே பூச்சுற்றியிருக்கின்றார். அவ்வளவே.

மீண்டும் ஜனாதிபதியாக அவர் பட்டபாடு எல்லோருக்கும் தெரிந்த பரகசியம். அதற்காக அவர் செய்த அரசியல் மொள்ளமாரித்தனம் அப்பட்டமானது.

கடந்த ஜனாதி பதித் தேர்தலின் போது தாம் தோற்றிருந்தால் தமது கதையை எட்டு அடி மண்ணுக்குள் முடித்திருப்பார்கள் என்று தாம் மோசமாக விவரித்த 'கொலைகாரர்களுடனேயே' அவர் கூட்டுச் சேர்ந்தார். அதற்காக அரசியல் சதி செய்து,ராஜபக்ஷக் களைப் பின் கதவால் கூட்டி வந்து பிரதமராக்கினார்.

யாரைத் தோற்கடிப்பதற்காக மக்கள் அவருக்கு வாக்களித்தார்களோ அந்த நபர்களையே புறவாசல் கதவு வழியாக பிரதமராக்கும் அட்டூழியத்தைப் புரிந்தார்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் கிடைத்த வாய்ப்பைத் தனது சுயலாப அரசியலுக்காக மண்ணாக்கினார்.

தாம் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்ற அவரது பேராசையே அமைதி முயற்சிகள் உட்பட எல்லாவற்றிலும் மண்ணைப் போட்டன.

ஒன்றுமில்லாத அவரை எதற்காக மக்கள் பொது வேட்பாளராகக் கூட்டிவந்து ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தினார்கள் என்பதை மறந்த மைத்திரியார், தாம் தொடர்ந்து ஜனாதிபதிப் பதவியில் தொடர்வதற்காக எல்லா முயற்சிகளையும் போட்டுக் குழப்பிச் சொதப்பினார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதிலிருந்து அனைத்து நன்முயற்சிகளும் குழம்பித் தடைப்பட்டுப் போனமைக்கு மீண்டும் ஒரு தடவை பதவியில் தொடர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை உள்மனத்தில் வைத்துக்கொண்டு அவர் மேற்கொண்ட அரசியல் காய்நகர்த்தகள்தாம் காரணம் என்பது வெள்ளிடைமலை.

பதவி, அதிகாரம் மீது அவர் கொண்டபேராசைதான்-நப்பாசைதான் - எல்லாக் குழப்பங்களுக்கும் ஒரே காரணம்.

மீண்டும் பதவிக்கு வருவதற்காகத் தலையால் கிடங்கு வெட்டிப் பார்த்தார். சரி வரவேயில்லை.

முதல் நாள் இரவு மஹிந்த ராஜபக்ஷவுடன் அமர்ந்து இருந்து அப்பம் சாப்பிட்டு விட்டு அடுத்த நாள் காலையில் அணி மாறி, உயர்த்திவிட்ட மஹிந்தரின் முதுகில் குத்தினார். பிறகு அவரை ஜனாதிபதியாக்கிவிட்ட ரணிலின் முதுகில் குத்திவிட்டு இன்னொரு தடவை ஜனாதிபதியாகக் குறுக்கு வழியில் முயன்றார். அவரை இனிமேல் ஒருவருமே நம்பத் தயாராக இல்லை.

அதனால் வேறு வழியின்றி மீண்டும் தேர்தலில் போட்டியிடும் முயற்சியைக் கைவிட்டுச் செல்ல வேண்டியவரானார்.

அப்படி வேறு வழியின்றி ஒதுங்கிவிட்டு, முன்னர் தாம் நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதி மொழி காரணமாகத்தான் தேர்தலில் இம்முறை போட்டியிடவில்லை என்று கூறி நாட்டு மக்களின் காதில் பூச்சுற்ற முயல்கின்றார் அவர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி பூரணப்படுத்தப்படாமை பற்றிக் கேட்டபோது "அது எனது விடயமல்ல.நாடாளுமன்றத்தின்வேலை" -என்றுவிட்டேத்தியாக-பொறுப்பின்றி - பதிலளித்தவர் அவர்.

ஆனால், ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் 19 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்தியபோது அதற்கான நல்ல பெயரைத் தாம் சுவீகரிக்க முயல்கின்றார் அவர். உண்மையில் அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாடாளுமன்றம் அதைச் செய்தே இருக்கும்.

இனப்பிரச்சினைத்தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரமைப்பு நகல்வடிவத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றும் பொறுப்புக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று கூறி தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொறுப்பிலிருந்து ஓடி, ஒளித்துக் கொண்ட மைத்திரியார், இப்போது 19 ஆவது அரசமைப்புத் திருத்த முயற்சி நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்றமைக்கு மட்டும் தாம் உரிமை கொண்டாடுகிறார். இது எப்படி நியாயம்?

ஆக, தமிழர்களைப் பொறுத்தவரை ஏதோ ஒன்று விட்டுத் தொலைந்தது என்று திருப்திப் படவேண்டியதுதான். வேறொன்றுமில்லை...!

- மின்னல் -

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன ஆற்றிய இறுதி உரையின் முழுமையான விவரம் வருமாறு:-

ஜனவரி 8, 2015 அன்று நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு வாக்களித்த 64 இலட்சம் வாக்காளர்களுக்கும் நன்றி கூறுகிறேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற சில நாள்களுக்குப் பிறகு, கண்டியில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையில் ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டேன்.

உங்களிடம் நான் கூறிய கூற்றை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம். அதாவது நான் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டேன். இது எனக்கு நாடாளுமன்றம், அமைச்சர்கள், அமைச்சரவை, சுதந்திர ஆணைக்குழுக்கள் மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் வரம்பற்ற நிர்வாக அதிகாரத்தை அளித்தது. அது என்னைத் தடுக்கவில்லை. ஆறு ஆண்டு கால ஜனாதிபதியாக மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் அரசமைப்புத் திருத்தத்தின்படி நான் அதை ஐந்து ஆண்டுகளாகக் குறைத்துள்ளேன்.

எனது ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு அதிகபட்ச சுதந்திரம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு வரம்பற்ற ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்த சுதந்திரம் இறுதியில் எனக்கு ஒரு பேரழிவாக மாறியது. சமூக ஊடகங்கள் உள்ளிட்ட ஊடகங்களால் நான் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளானேன். ஆனால் நான் நடுங்கவில்லை.

எனது ஆட்சிக் காலத்தில் எந்த அரசாங்க துப்பாக்கியும் சுடப்படவில்லை. மக்கள் சுதந்திரமாக இருக்க வேண்டிய சூழலை நான் உருவாக்கினேன். எனது தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல விடயங்களை நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன்.

எனக்கும் அரசாங்கத்தின் சில பிரிவுகளுக்கும் இடையே எழுந்துள்ள கொள்கைப் பிரச்சினைகள் காரணமாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்கள் எதிர்பார்த்த சில விடயங்களை என்னால் செய்ய முடியவில்லை. அரசாங்கத்தில் உள்ள பிரச்சினைகள் காரணமாக அது முடியாமல் போனது.

அரசாங்கத்தில் சிலர் தங்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தினர். நான் ஆட்சிக்கு வந்தபோது, இந்த நாடு வெளிநாடுகளில் இருந்து கடும் அழுத்தத்தில் இருந்தது. அது 2014 பருவத்தில் இருந்தது. ஆனால் எனது ஆட்சிக் காலத்தில், சர்வதேச சமூகத்தின் 90 சதவீத அழுத்தம் நீக்கப்பட்டது.

நாளைக்கு சில முக்கிய சிக்கல்கள் உள்ளன. சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைப்பது முக்கியம். அதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன். ஊழல் மற்றும் மோசடி குறித்து விசாரிக்க முன்வந்தேன். எனது சொந்த அரசாங்கத்தில் ஊழல் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணையங்களை நியமித்தேன்.

மத்திய வங்கி மோசடி குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமித்தேன். இந்த விடயத்தில் விசாரணைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. மத்திய வங்கி தடயவியல் தணிக்கை நடத்தியது. இது நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்று நம்புகிறேன். இது புதிய ஜனாதிபதியின் பொறுப்பு.

மேலும், புதிய ஜனாதிபதி யாரென்பது நாளை(இன்று) தெரியவரும். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு நல்ல அமைச்சரவையை நியமிப்பதே ஜனாதிபதிக்கு முதல் சவால்.

இந்த ஜனாதிபதி தேர்தலை எந்தப் பிரச்சனையும் இல்லாமல் என்னால் நடத்த முடிந்தது.

எதிர்கால ஜனாதிபதிக்கு ஒரு பொறுப்பு உள்ளது. நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயகத்தை பாதுகாப்பதும் பத்திரிகை சுதந்திரத்தை அதிகரிப்பதும் அவரது பொறுப்பு. போதைப் பொருள் கடத்தல் மற்றும் சிறுநீரக நோயை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் திட்டங்களைத் தொடரவும் நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

ஆயுதப்படைகள், காவல் துறை, சிவில் பாதுகாப்புத் துறை மற்றும் அரசு ஊழியர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய தேசபக்த தலைவர்கள் ஆங்கிலேயர்களால் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டதாக வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது எனது பெரிய சாதனை.

எனது ஆட்சிக் காலத்தில், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு சேவை செய்ய முடிந்தது. அவர்களுடைய நிலங்களை விடுவித்து அவர்களின் வாழ்க்கை நிலைமைகளை என்னால் கட்டியெழுப்ப முடிந்தது. நான் அதை செய்ததில் மகிழ்ச்சி.

ஜனாதிபதியாக எனது சில முடிவுகள் சர்ச்சைக்குரியவை. நான் வாளை வெளியே பயன்படுத்தவில்லை என்று சிலர் சொன்னார்கள். நான் வாளைப் பயன்படுத்தினேன். எனது சொந்த பிரதமர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வேறு யாரோ நியமிக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்றத்தைக் கலைக்க ஐந்து வர்த்தமானி அறிவிப்புகளில் கையெழுத்திட்டேன்.

பொலிஸ்துறை எனது கட்டுப்பாட்டிற்கு வந்து 11 மாதங்களே ஆகின்றன. நான் பொலிஸ் துறையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தினேன்.

எனது பதவிக்காலத்தில் மிகவும் அதிர்ச்சிகரமான நிகழ்வு ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல். இறந்தவர்களை மிகுந்த மரியாதையுடன் நினைவில் கொள்கிறேன். அதைத் தவிர்த்திருக்க முடியும். நான் இதைப் பற்றி அதிகம் பேச மாட்டேன்.

எனது பதவிக்காலத்தில் எனக்கு திருப்தி இருக்கிறதா என்று யாராவது என்னிடம் கேட்டால், நான் ஒரு நொடியில் அளிக்கும் பதில், நான் திருப்தி அடைகிறேன்.

அந்த நாட்டிற்கும் மக்களுக்கும் நான் நிறைய கொடுத்திருக்கிறேன். நான் என் பாக்கெட்டைக் கொடுத்ததை என்னால் உணர முடியவில்லை. ஜனநாயகம் ஊழல் இல்லாத, ஆன்மீக சமுதாயத்தை உருவாக்குவதற்காக முயன்றேன்.

எனது அரசியல் வாழ்க்கையை வெற்றிபெறச் செய்ய நான் தீவிரமான முடிவுகளை எடுக்கும்போது எனது மனைவி ஜெயந்தியும் குழந்தைகளும் எனக்கு மிகுந்த பலத்தையும் ஆசீர்வாதத்தையும் தருகிறார்கள்.

ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளாக ஜனாதிபதியில் பணியாற்றிய நான், நாட்டின் புதிய ஜனாதிபதிக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியிருந்தாலும், எனது பெரிய மற்றும் அன்பான மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய வேண்டிய அனைத்து அர்ப்பணிப்புடனும் நாளை தொடர நான் உறுதியாக இருக்கிறேன். நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துங்கள், ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்துங்கள், மனித உரிமைகளை வலுப்படுத்துங்கள். தாய்நாட்டை முன்னோக்கி அழைத்துச்செல்ல நான் நாளை உங்களுடன் சேருவேன் - என்றார்.

## அமைதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் அமைதியான முறையில் இடம் பெற்றதாகவும் பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பவ்ரல் அமைப்பின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் கூறுகையில்-

முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இந்தத் தடவை ஜனாதிபதித் தேர்தலை மிகவும் குறைந்தளவு வன்முறை சம்பவங்களும் சட்டமீறல்களும் இடம்பெற்ற தேர்தல் எனக் குறிப்பிட முடியும்.

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக பவ்ரல் அமைப்பின் 5 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் நேற்று வாக்களிப்புப் பணிகளை கண்காணிப்பதற்காகச் சுமார் 6 ஆயிரம் அதிகாரிகள் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அதேவேளை, நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகச் சுமார் 320 இற்கும் அதிகமான அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அத்துடன், 150 அதிகாரிகள் தேர்தல் வாக்கெண்ணும் பணிகளைக் கண்காணிப்பதற்காகப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் -என்றார். (ஐ)

## நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முதல் தடவையாக எந்தவித வன்முறைகளும், குற்றச்செயல்களும் இன்றி ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நாட்டில் நடைபெறுகின்றது. 19 ஆவதுவ்திருத்தச் சட்டத்தின் கீழ் சுதந்திர சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவை அமைத்தோம். அந்த நடவடிக்கையின் பெறுபேற்றையே நாம் இன்று காண்கின்றோம் - எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (நேற்றுக் காலையில் வாக்களித்த பின்னர் இதே விடயம் தொடர்பாகப் பிரதமர் தெரிவித்த கருத்துகள் 16 ஆம் பக்கத்தில்)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் தெரிவித்தன.

சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த அழைப்பை வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் முழு அளவில் ஏற்று தமது ஒற்றுமைப்பட்ட நிலைப்பாட்டை காட்டியுள்ளனர்.

# சட்டபூர்வமான தேர்தல் கபே அமைப்பு பாராட்டு

கொழும்பு,நவ.17

2010 ஆம், 2015 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை சட்டபூர்வமான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடிந்ததாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஹமட் மனாவ் மக்கீன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் தமது அமைப்பைச் சேர்ந்த 2 ஆயிரத்து 200 ற்கு மேற்பட்ட பிரதிநிதிகளை ஈடுபடுத்தினர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இன்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சட்டத்தை மதிக்கும் வகையில் நடைபெற்ற மிகச்சிறப்பான ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும் என்று கபே அமைப்பின் ஊடகப் பணிப்பாளர் அரவிந்த இந்திரஜித் இதன் பொது தெரிவித்தார்.

இதற்காக அரசியல் கட்சிகள் சிறந்த பங்களிப்பை நல்கியிருந்தன. எனினும் சமூக ஊடக செயற்பாடுகள் குறித்து திருப்தியடைய முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசப்பிரிய அறிவித்தார்.

நேற்று மாலை அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

தேர்தல் பெறுபேறு வெளியான உடன் பதவி விலகத் நான் நடவடிக்கை எடுபக்கப்போவதில்லை. ஏனெனில், நடைபெற்ற தேர்தல் தொடர்பான அறிக்கைகள் பல தயாரிக்கப்படவுள்ளன. இத்தேர்தலின் பின்னர் முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள் பல இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றிய பின்னரே பதவி விலகவுள்ளேன் - எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (மு)

## யாழ்ப்பாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இரவு நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும் யாழ். தோதல் மாவட்டத் தில் எந்தவொரு வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை.

யாழ்.தோதல் மாவட்டத்தில் 631 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணிக்கு பலத்த பாதுகாப்புடன் வாக்களிப்பு ஆரம்பமானது.

மாலை 5 மணிக்கு வாக்களிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்த நிலையில், வாக்கெண்ணும் மத்திய நிலையமான யாழ்.மத்திய கல்லூாக்கு பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பெட்டிகள் எடுத்துவரப்பட்டன.

குறிப்பாக தீவுப் பகுதிகளில் அமைக்கப்பட்ட 9 வாக்குச் சாவடிகளில் இருந்து கடற்படையின் உதவியுடன் வேகப் படகுகளிலும், நெடுந்தீவிலிருந்து விமானப்படை உலங்கு வானூர்தியின் மூலமாகவும் வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்பட்டிருந்தன.

யாழ்.மாவட்டத்தில் நண்பகல் கடுமையான மழை பெய்த நிலையில் வாக்களிப்பு சடுதியாக குறைவடைந்தபோதும், மாலையில் வாக்களிப்பு வேகமாக நடைபெற்றது. மேலும் மாவட்டத்தில் எங்கும் வன்செயல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆங்காங்கே வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் கட்சிகள் தமது சின்னத்தை அச்சிட்ட கடதாசித் துண்டுகளைப் பெருமளவில் வீசிச் சென்றிருந்தன. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இரவு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு நேற்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. அதனையடுத்து நேற்று மாலை 5.15 மணியளவில் தபால்மூல வாக்குகளை எண்ணும் பணிகள் ஆரம்பமாகின.

வரலாற்றில் முதல்தடவையாக அம்பாந்தோட்டையில் 85 சதவீத வாக்குப்பதிவு இடம் பெற்றுள்ளது. மன்னாரில் குறைவான வாக்குப்பதிவாக 62 சதவீதம் காணப்படுகிறது. நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 80 சதவீத வாக்குப் பதிவு இடம் பெற்றுள்ளது.

நாளை திங்கள்கிழமை மாலை வெற்றிபெறும் வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்படும். நாளைமறுதினம் காலையில் பதவி ஏற்க முடியும் - என்றார். (ஐ)

## மதவாச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுச் சனிக்கிழமை மாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு புத்தளத்தில் இருந்து மன்னார் நோக்கி வருகை தந்த அரச பஸ்கள் மீது ஓயாமடுப் பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் அரச பஸ்களுக்கு பாதிப்பு ஏற்பட்டபோதும் மக்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை.

இந்நிலையில் நேற்று அந்த மக்கள் வாக்களித்துவிட்டு மீண்டும் அரச பஸ்களில் மதவாச்சி ஊடாக புத்தளம் சென்றுகொண்டிருந்தபோது நேற்று மாலை சுமார் 6 மணியளவில் மதவாச்சிப் பகுதியில் வைத்து இனம் தெரியாத நபர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கல் வீச்சுத் தாக்குதலின்போது அந்த பஸ்ஸில் பயணித்த இரண்டு பயணிகள் காயமடைந்த நிலையில் மதவாச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களையும், சம்பவம் இடம்பெற்ற இடத்தையும் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

தாக்குதல் தொடர்பில் மதவாச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நெறிமுறை மீறும் ஊடகப்போக்கு

இலங்கையின் எட்டாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களின் வாக்களிப்பு முடிவடைந்து விட்டது.

முன்னைய எல்லாத் தேர்தல்களுடனும் ஒப்பிடுகையில் தேர்தல் வாக்களிப்பு வரையான வன்முறைச் சம்பவங்கள் இந்தத் தேர்தலில் கணிசமான அளவு குறைவுதான்.

ஆனால், பிரசார வன்முறை – ஊடக அராஜகம் – முன்னைய தேர்தல்கள் எல்லாவற்றையும் மீறி, மிக மோசமானதாக – மிகக் கேவலமானதாக – மிக மிகக் கீழ் மட்டத்தில் – அமைந்தமையை இந்தத் தேர்தலில்தான் நாம் கண்டோம்.

பொய்யான – தவறான – அறிக்கையிடல், முழுப் பித்தலாட்டப் பிரசாரம், பொய் என்று தெரிந்து கொண்டே – வேண்டுமென்றே – இனவாதத்தைத் தூண்டும் மோசமான செய்திகளை வெளியிடல் என ஊடகங்களும், அவற்றின் நிர்வாகிகளும் சேர்ந்து பண்ணிய களேபரம் எல்லை மீறியதாகும்.

எதிர்காலத்தில் இந்த நாட்டில் நீதி, நேர்மையான தேர்தல் ஒன்றுக்கு இடமளிக்கவே மாட்டோம் என்று கங்கணம் கட்டிச் செயற்பட்டன நமது ஊடகங்கள் என்றே தோன்றுகின்றது.

அரசியல் என்ற வியாபாரத்துக்கு ஊடகப் பிரசாரம் என்ற அங்கம் அத்தியாவசியம் – இன்றியமையாதது – எனும் காரணத்தை அடிப்படையாக வைத்து, பணமும், செல்வாக்கும் ஈட்டும் ஒரே நோக்கத்துக்காக ஊடகங்கள் கேவலமான நிலைமை வரை இறங்கிச் செல்லும் இந்தப் போக்கு நாட்டுக்கு மிக ஆபத்தானது. எதிர்காலத்தில் நாட்டுக்குப் பெரும் விபரீதத்தை ஏற்படுத்தக் கூடியது.

தேர்தல் ஆணையமும், நீதிமன்றங்களுக்கும் சட்டம் என்ற சாட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு கடுமையான நிலைப்பாட்டுடன் விடயங்களை ஒழுங்குபடுத்தாவிட்டால் நிலைமை திருந்தாது என்றே நாம் கருதுகிறோம்.

ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் பற்றியெல்லாம் பீற்றிக் கொள்ளும் நமது ஊடகத்துறை அதற்கான ஒழுங்கு முறைகள், கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள், நியதிகள், தார்மீகக் கடப்பாடுகள், நியாயமான பண்பியல்புகள் போன்றவற்றை எல்லாம் சுயமாக மதித்துச் செயற்பட வேண்டும். சுய தணிக்கை ஒழுங்காக முன்னெடுக்கப்பட வேண்டும்.

'திருடனாகப் பார்த்துத் திருந்தினால் ஒழிய திருட்டைத் தடுக்க முடியாது' என்பது போல இது விடயத்தில் ஊடகங்களாகப் பார்த்துத் திருந்தினால்தான் நிலைமை சீரடையும்.

ஆனால், ஊடகங்கள் திருந்துவனவாக இல்லை. ஊடகம் என்ற சுயமதிப்பு நிலைமையை விட்டு இறங்கி, அவை தம்மைக் கேவல அரசியலில் பங்குதாரர்களாக்கிக் கொண்டுள்ள அவலமே இங்கு மேலோங்கியுள்ளது. ஊடகங்களே மூன்றாந்தர அரசியல் செய்யும் நிலையில், ஊடக மாண்பு பேணப்படும் என்று நம்புவது அர்த்தமற்றது.

சுதந்திரத் தேர்தல் ஆணையமும், நீதி மன்றங்களும் சட்டத்தை முழு அளவில் – முழு ஈடுபாட்டுடன் – இந்த நாட்டில் சுதந்திரமான, நீதி, நியாயமான, ஒழுங்கு முறையான தேர்தல்கள் இடம்பெறச் செய்வதற்கான கடப்பாடும், பொறுப்பும், உறுதிப்பாடும் தம் மீதே – தம் மீது மட்டுமே – சுமத்தப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை, யதார்த்தத்தைப் புரிந்து, துணிச்சலுடனும், வெளிப்படையாகவும், தெளிவாகவும் செயலாற்ற முன்வர வேண்டும்.

ஊடகங்களின் அத்துமீறிய அராஜகப் போக்கை முளையிலேயே கிள்ளி எறியும் பாங்கில் கடுமையான நடவடிக்கையை நீதித்துறை முன்னெடுக்க வேண்டும். ஊடகக் கலாசாரத்தை பொறுத்தவரை பொறுப்புக் கூறல் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

புதிய ஜனாதிபதி இன்றோ, நாளையோ பதவி ஏற்றதும் அமைச்சுகள், பதவிகள் எல்லாம் அல்லோல கல்லோலப்படும்.

குதிரைப்பேரங்களை நடத்தி, அணிகளை விற்று – வாங்கி, ஆட்சியை மாற்றி, பதவிகளைச் சூறையாடி, விஷமம் பண்ணும் அரசியல் சதுரங்கம் – பதவியாசை அனர்த்தங்கள் – இனி அடுக்கடுக்காக அரங்கேறும். அதற்காகக் கோடிகள் புரளும். இது எதிர்பார்க்கப்படுவதே.

பிறகென்ன... ? இப்படிப் புரளும் பணத்தில் அள்ளுவதை நாமும் அள்ளிக் கொள்வோம் என்று ஊடகங்களும் தம் பங்குக்குத் தமது கைவரிசையைக் காட்டும். அதில் சந்தேகமே வேண்டாம்.

ஊடக மாண்புகள், பண்பியல்புகள், ஒழுங்கு விதிகளை மீறி அறிக்கையிடும் கேவலம் இந்தத் தேர்தல் வாக்களிப்பு முடிந்து இனி முடிவு அறிவிக்கப்பட்ட பின்னரும் தொடரும்.

இருக்கும் பிரதமரை வீழ்த்துதல், புதியவர்களைச் செருகுதல், ஆட்சி அமைப்பதற்குத் தேவையான எம்.பிக்களைப் பேரம்பேசி வழிக்குக் கொண்டு வருதல், புதிய அரசில் அமைச்சரவையில் தேவையானவர்களுக்கு இடம்பெற்றுக் கொடுத்தல் என்று சகுனித்தனம் பண்ண வேண்டிய பல காரியங்கள் காத்திருக்கின்றன. அவை இனித்தான் கட்டவிழ வேண்டும்.

அதிலும் கூட, வசமாக லாபமீட்டும் தம் கைவரிசையை நமது ஊடகங்கள் கனகச்சிதமாக ஒப்பேற்றும் என எதிர்பார்க்கலாம்.

# யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு தாக்குதல் நடத்த சென்ற ஆவா குழுவினர்

## 14 பேர் புதுக்குடியிருப்பில் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ. 17

முல்லைத்தீவில் வாள்வெட்டு வன்முறையில் ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஆவா குழுவைச் சேர்ந்த 14 பேர் தருமபுரம் மற்றும் புதுக்குடியிருப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் தாக்குதல் நடத்தச் சென்ற இருவர் சுதந்திரபுரத்தில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஓட்டோ ஒன்றில் பயணித்த இருவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாராலும் பஸ்ஸில் பயணித்த 10 பேர் தருமபுரம் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டனர்.

ஆனைக்கோட்டை, கூழாவடி மற்றும் மானிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

சுதந்திரம் பகுதியில் வாள்வெட்டு வன்முறையில் ஈடுபடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து பஸ், ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் கும்பல் ஒன்று வருகை தந்துள்ளது. இரவு 9 மணிக்கு அந்தக் கும்பல் தாக்குதலுக்கு முற்பட்டவேளை, இருவரைப் பொது மக்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.

அதனால் பஸ் மற்றும் ஓட்டோவில் பயணித்தவர்கள் அங்கிருந்து தப்பித்தனர். பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இருவரும் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் பலர் பஸ் மற்றும் ஓட்டோவில் தப்பித்துள்ளனர் என்று பொதுமக்களால் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பஸ் மற்றும் ஓட்டோவின் இலக்கங்கள் தருமபுரம் மற்றும் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு உடனடியாக வழங்கப்பட்டன.

அத்துடன், புதுக்குடியிருப்புப் பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் ஓட்டோவில் பயணித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். பஸ்ஸை இரவு 10.30 மணியளவில் தருமபுரம் பொலிஸார் வழிமறித்து அதில் பயணித்த 10 பேரைக் கைது செய்தனர். பஸ்ஸுக்குள் இருந்து கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

நீண்ட நாள்களாகத் திட்டமிடப்பட்டு இந்தத் தாக்குதலுக்கு ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் முயற்சித்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸில் கைது செய்யப்பட்ட நால்வரில் இருவருக்கு யாழ்ப்பாணம் நீதி மன்றில் கொலைக் குற்றச்சாட்டு வழக்கு உள்ளது. அத்துடன், கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய வழக்குகளும் உள்ளன என்பது விசாரணைகளில் தெரியவந்தது.

சந்தேகநபர்கள் நால்வர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றிலும் 10 பேர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றிலும் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொலிஸார் தேர்தல் கடமைகளில் உள்ள வேளை இந்தத் தாக்குதலை நடத்தலாம் என்று கும்பல் திட்டமிட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ஐ – 07)

# கேகாலையில் வாக்களித்த சிலர் மீது நேற்று தாக்குதல்



கொழும்பு, நவ. 17

கேகாலை - தெரணியகல பகுதியில் வாக்களித்த சிலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஒரு தரப்பினருக்கு வாக்களிக்க வேண்டுமெனச் சிலர் அச்சுறுத்தினர் எனவும், அதையும் மீறி தான் விரும்பிய வேட்பாளருக்கு வாக்களித்த சிலர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வீடொன்றுக்குள் நுழைந்த சிலர், வீட்டிலிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமையோடு ஆண் ஒருவரையும் கத்தியால் வெட்டியுள்ளனர்.

இதனால், அங்கு அமைதியின்மையான சூழல் நிலவுவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தல் கால வன்முறைகள் தொடர்பில் அறிவிக்க விசேட முறைப்பாட்டு பிரிவு

கொழும்பு, நவ. 17

ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் இந்த காலப் பகுதியில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள பவ்ரல் அமைப்பு, 24 மணித்தியாலமும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக அறிவிக்க கூடிய வகையில் விசேட முறைப்பாட்டு பிரிவு ஒன்றை அமைத்துள்ளது.

தேர்தல் துஷ்பிரயோகம், ஊழல், மோசடி உள்ளிட்ட தேர்தலுடன் தொடர்புடைய எந்த வகையான முறைப்பாடுகளையும் இந்தப் பிரிவில் தெரிவிக்க முடியும்.

இவ்வாறு தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதாவது மேல் மாகாணம் 070 – 4701141, மத்திய மாகாணம் 070–4701142, வட மேல் மாகாணம் 070–4701143, சப்ரகமுவ மாகாணம் 070 – 4701144, வட மத்திய மாகாணம் 070 – 4701145, தென் மாகாணம் 070–4701146, ஊவா மாகாணம் 070–4701147 மற்றும் மற்றும் கிழக்கு மாகாணம் 070–4701148 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு முறைப்பாடுகளை அறிவிக்க முடியுமெனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)




**நாளை**
18.11.2019
திங்கட்கிழமை
நட்சத்திரம்: ஷஷ்டி பி.ப.03.57 வரை.
திதி : பூசம் மரண மு.இ. 09.40 வரை.
இராகுகாலம் : 07.38 – 09.08
சுப நேரம் : 12.08 – 01.38



நேற்றைய ஜனாதிபதித் தேர்தலில் மலையக அரசியல் தலைவர்கள் வாக்களிக்கச் சென்ற போது எடுக்கப்பட்ட படங்கள்....

# வாக்களிப்பை புறக்கணிக்குமாறு போலிப் பிரசாரம் முன்னெடுப்பு

கொழும்பு, நவ. 17

நாட்டு முஸ்லிம்களை வாக்களிக்கவேண்டாமெனக் கூறிய பொய்யான ஒரு அறிக்கை பரவியது என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தெரிவித்துள்ளது.

தாம் அவ்வாறான எந்தவித அறிக்கையையும் வெளியிடவில்லை எனவும் அனைத்து ஆண்களும் பெண்களும் வாக்களிப்பை மேற்கொள்ளுமாறும் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை நேற்று வேண்டுகோள் விடுத்தது.

# வாக்குச்சீட்டை ஒளிப்படம் எடுத்த முல்லை. ஊடகவியலாளர் கைது!

முல்லைத்தீவு, நவ. 17

வாக்களிப்பு நிலையத்துக்குள் தனது வாக்குச்சீட்டை ஒளிப்படம் எடுத்த முல்லைத்தீவு மாவட்ட சுயாதீன ஊடகவியாலளர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், டோடன்டுவ பிரதேசத்திலும் இதே குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் கூறினர்.

வாக்களிப்பு நிலையத்துக்குள் அலைபேசியை எடுத்துச் செல்லவேண்டாம் என்று பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.

இந்த நிலையில் இந்த இருவரும் தமது வாக்குச்சீட்டை ஒளிப்படம் எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# வாக்குச் சீட்டுகளுடன் கைதானவர் உடனேயே பிணையில் விடுதலை

கொழும்பு, நவ. 17

600 வாக்குச் சீட்டுகளுடன் நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட நாகொட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தல்கஸ்வல பகுதியில் வைத்தே நேற்றுக் காலை பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தப் பகுதிக்கு பொறுப்பான பிராந்திய தேர்வு அலுவலகர் வழங்கிய தகவலுக்கமையவே நாகொட பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக நாகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளம் தம்பதியரின் சடலங்கள் மீட்பு!

மட்டக்களப்பு, நவ. 17

மட்டக்களப்பு – வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள வாகனேரி மானாவாரிக் கண்டம் எனும் பகுதியில் இளம் குடும்பஸ்தர்களான கணவன் மற்றும் மனைவியின் சடலங்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நாகதம்பிரான் கோயில் வீதி, கிண்ணையடி வாழைச்சேனை எனும் முகவரியைச் சேர்ந்த நமசிவாயம் குணம் (வயது 35), விநாயகன் தேவி (வயது 30) ஆகிய இருவரினதும் சடலங்களையே நேற்று முற்பகல் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

வாகனேரி – மானாவாரிக் கண்டத்திலுள்ள வயல் வாடியில் மனைவியும் அங்குள்ள காட்டுப் பகுதியில் கணவனும் சடலமாகக் கிடைப்பதை அவதானித்த அந்தப் பகுதியால் சென்றவர்கள் பொலிஸாருக்கும் உறவினர்களுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில் அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார், கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரினதும் சடங்களை மீட்டுள்ளனர்.

சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காகநாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

வவுனியாபிரதேசத்தில்–உளுக்குளத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# வாக்களிப்பு நிலையத்தில் குரங்குகள் அட்டகாசம்!



மட்டக்களப்பு, நவ. 17

கல்குடா பகுதியில் வாக்களிக்க வந்த வாக்காளர்களுக்கு குரங்குகள் தொல்லை கொடுத்த சம்பவமொன்று நேற்று சனிக்கிழமை பதிவாகியுள்ளது.

கல்குடா தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையக் கூரையிலும் மரங்களிலும் குரங்குகள் அங்கும் இங்கும் பாய்ந்து சலசலப்பை ஏற்படுத்தின.

அத்துடன் அந்தக் குரங்குகள், வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள இடத்துக்கும் வந்து, வாக்காளர்களுக்கு தொல்லை கொடுத்துள்ளன.

இதன்போது தேர்தல் பணியிலிருந்த அதிகாரிகள், சில இளைஞர்களின் உதவியுடன் குரங்குகளை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளிவேற்றியுள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

# மிகவும் பரபரப்புக்கு மத்தியில் நேற்று மாலை சபரிமலையில் திறக்கப்பட்டது ஐயப்பன் நடை





திருவனந்தபுரம்,நவ.17

பரபரப்பான சூழலில், வருடாந்திர கார்த்திகை மாத மண்டல பூஜைக்காக நேற்று (நவம்பர்16) மாலை சபரிமலை அய்யப்பன் கோயில் நடை திறக்கப்பட்டது. நேற்று மாலை 5 மணிக்கு திறக்கப்பட்ட கோயில் நடை, அடுத்த 48 நாள்களுக்கு திறந்திருக்கும்.

இதற்கிடையில் சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்கலாம் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்த சீராய்வு மனு, 7 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்விற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனால் அனைத்து வயது பெண்களும் அனுமதிக்கப்படலாம் என்ற முந்தைய தீர்ப்பே தற்போது நடைமுறையில் இருக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சபரிமலை கோயிலை சுற்றி 10,000க்கும் அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சபரிமலை அய்யப்பன் கோயில் போராட்டத்திற்கான இடமில்லை என கேரள அரசு ஏற்கனவே தெளிவுபடுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

கேரள தேவசம் போர்டு அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் கூறுகையில் –

“சபரிமலை கோயில் போராட்டம் நடத்துவதற்கான இடம் அல்ல. திருப்தி தேசாய் போன்ற போராட்டக்காரர்கள் தங்களின் பலத்தைக் காட்ட இது இடமல்ல. அவர்களை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். போய் நீதிமன்ற உத்தரவை வாங்கி வரட்டும். அவ்வாறு நீதிமன்ற உத்தரவுடன் வரும் பெண்களுக்கு மட்டுமே நாங்கள் பாதுகாப்பு அளிப்போம்” – என்றார்.

ஊடகங்களுக்கு கேரள அமைச்சர் விடுத்துள்ள வேண்டுகோளில் –

“மீடியாக்கள் போராட்டக்காரர்கள் யாரையும் பேட்டி எடுக்க வேண்டாம். அது அவர்களைத் தூண்டி விடுவது போல் ஆகி விடும். அரசியல் ஆதாயம் தேடுவதற்காகவே சிலர் சபரிமலை கோயிலுக்கு வர முயற்சிப்பார்கள். ஆனால் அதில் மீடியாக்களின் பங்கு இருக்க வேண்டாம்” – என்றார்.

இதற்கிடையில் கடந்த ஆண்டு கள்ளத்தனமாக சபரிமலை கோயிலுக்குள் செல்ல முயற்சித்த புனேவை சேர்ந்த திருப்தி தேசாய், இந்த ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதிக்கு மேல் சபரிமலைக்குத் தாம் செல்ல உள்ளார் என அறிவித்துள்ளார். இது பற்றி அவர் கூறுகையில் –

“நவம்பர் 20 க்குப் பிறகு சபரிமலை செல்வேன். கேரள அரசிடம் பாதுகாப்பு கேட்டுள்ளோம். அவர்கள் பாதுகாப்பு அளிப்பதா, வேண்டாமா என்பது அவர்கள் விருப்பம். அவர்கள் பாதுகாப்பு அளிக்கா விட்டாலும் நான் சபரிமலைக்கு சென்று சாமி தரிசனம் செய்வேன்” – என்றார். பெண்களைக் கோவிலுக்குள் அனுமதிப்பதில்லை என்பதில் உறுதியாக இருக்கும் போராட்டக்காரர்கள் இதைக் கடுமையாக எதிர்ப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரபல மராத்தி பாடகி கீதா மாலி கார் விபத்தில் பலி; கணவர் காயம்



பிரபல மராத்தி பாடகி கீதா மாலி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கென்டெய்னர் லொறி மீது எதிர்பாராதவிதமாகக் கார் மோதிய விபத்தில் உயிரி ழந்திருக்கிறார்.

பிரபல மராத்தி பாடகி கீதா மாலி. இவர் திரைப் படங்களில் ஏராளமான பாடல்களை பாடி உள்ளார். தனியாக இசை ஆல்பங்களையும் வெளியிட்டு இருக்கிறார். நிகழ்ச்சியொன்றில் பங்கேற்பதற்காக சமீபத்தில் கீதா மாலி அமெரிக்கா சென்று இருந்தார். அங்கிருந்து மும்பை திரும்பிய அவர் நாசிக் நகருக்கு காரில் புறப்பட்டு சென்றார்.

அவருடைய கணவர் விஜய்யும் அதே காரில் இருந்தார். தானே மாவட்டத்தில் உள்ள சாஹப்பூர் என்ற இடத்தில் அதிகாலை 3 மணிக்கு கார் சென்று கொண்டிருந்தது. அப்போது வீதி ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கென்டெய்னர் லொறி மீது எதிர்பாராதவிதமாக கார் திடீரென்று மோதியது.

இந்த விபத்தில் கீதாவும், அவரது கணவரும் படுகாயம் அடைந்தனர். இரத்த வெள்ளத்தில் கிடந்த இருவரையும் அக்கம்பக்கத்தினர் மீட்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு இருவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆனால் சிகிச்சை பலனின்றி பாடகி கீதா மாலி இறந்துபோனார்.

அவரது கணவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கீதா மாலி மறைவுக்கு மராத்தி பட உலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்

# நீராவிக் கொள்கலன் வெடித்தில் பீகாரில் 4பேர் பலி: ஐவர் காயம்



மோதிஹரி,நவ.17

பீகார் மாநிலம் மோதிஹரி பகுதியில் பொய்லர் ’நீராவிக் கொள்கலன்’ வெடித்து ஏற்பட்ட விபத்தில் 4 பேர் பலியாகினர்.

பீகார் மாநிலம், மோதிஹரி அருகே சுகாலி பகுதியில் உள்ள ஒரு தொண்டு நிறுவனத்தில் நேற்று அதிகாலை சமையல் செய்து கொண்டிருந்த போது பொய்லர் வெடித்து விபத்து ஏற்பட்டது. இதனால் சமையலறையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 5 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# திருப்பதி லட்டு விலை உயர்வு



திருமலை,நவ.17

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்யும் பக்தர்கள் அனைவருக்கும் தலா 1 இலவச லட்டு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சலுகை விலையில் வழங்கப்படும் லட்டுகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு இனி தலா 50 ரூபாய் விலையில் எத்தனை லட்டுகள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்தர்களுக்கு வைகுண்டம் காத்திருப்பு அறை நுழைவு வாயிலில் ரூ. 70 சலுகை விலையில் 4 லட்டுகளை வழங்குவதற்கான டோக்கன் வழங்கப்படுகின்றன. ஒரு லட்டு தயார் செய்வதற்கு ரூ. 40 செலவாகும் நிலையில், சலுகை டோக்கன்களால் ஆண்டுக்கு ரூ.200 கோடி இழப்பு ஏற் படுவதாக அதிகாரிகள் கூறுகின் றனர். எனவே ரூ. 70 லட்டு சலுகை டோக்கனை முற்றிலுமாக நிறுத்த தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.

இதற்கு பதிலாக தரிசனம் செய்யும் அனைத்து பக்தர்களுக்கும் தலா 1 இலவச லட்டு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக லட்டு வேண்டுமென்றால் தலா 50 ரூபாகொடுத்து எத்தனை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்றும் இந்த புதிய நடைமுறை விரைவில் அமலுக்கு வரும் எனவும் தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# 200 அடி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 6 வயதுச் சிறுவன் மீட்பு!










நாசிக்,நவ.17

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் 200 அடி ஆழ்குழாய் கிணற்றில் விழுந்த 6 வயதுச் சிறுவன் பத்திரமாக மீட்கப்பட்டான்.

ஆழ்குழாய் கிணற்றில் விழுந்த சிறுவனின் பெயர் ரிதேஷ் ஜவான்சிங் சோலங்கி ஆவான். இந்த சிறுவன் நாசிக் மாவட்டம், கல்வான் தாலுகாவில் உள்ள பேஜ் கிராமத்தை சேர்ந்தவன். இவனது தந்தை ஜவான்சிங் சோலங்கி. இவரது மகன் ரிதேஷ்(6). இவனது பெற்றோர் விவசாயிகள் ஆவர்.

வியாழனன்று காலை ரிதேஷ் மற்ற சிறுவர்களுடன் பேஜ் கிராமத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது திறந்து கிடந்த ஆழ்குழாய் கிணற்றில் விழுந்து விட்டான். இந்த கிணறு 200 அடி ஆழமானது. இது பற்றி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 3 மணி நேரத்தில் மீட்பு படையினர் ரிதேஷைப் பத்திரமாக கிணற்றில் இருந்து மீட்டனர்.

இந்த ஆழ்குழாய் கிணறு 200 அடி ஆழமானது என்றாலும், ரிதேஷ் 50 அடி ஆழத்தில் சிக்கியிருந்தான் என அதிகாரிகள் கூறினர். மேலும் அவன் சுயநினைவுடன் இருந்தான் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மீட்பு படையினர் ஒரு கயிற்றை கிணற்றினுள் இறக்கினர். ரிதேஷ் அந்தக் கயிற்றை கெட்டியாக பிடித்துக் கொண்டான். மீட்பு படையினர் அந்த கயிற்றை மேலே இழுத்து ரிதேஷைக் காப்பாற்றினர்.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதும், மருத்துவ பரிசோதனைக்காக ரிதேஷ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான். அவனை பரிசோதித்த டாக்டர்கள் ரிதேஷ் ஆரோக்கியமாக இருக்கிறான் எனக் கூறினர். இதனைத் தொடர்ந்து ரிதேஷ் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

காலைக்கதிர் Kalaikathir



# 298 பயணிகளுடன் மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமையின் பின்னணியில் ரஷ்யா?

## சர்வதேச விசாரணைக் குழு குற்றச்சாட்டு

ஆம்ஸ்டர்டாம்,நவ.17

2014 ஆம் ஆண்டு 298 பேரை பலிகொண்ட விமான அழிவுச் சம்பவத்தில், மலேசிய விமானத்தைச் சுட்டுவீழ்த்த ரஷ்யா கட்டளையிட்டதா என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

நெதர்லாந்து நாட்டின் தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசியன் ஏர்லைன்ஸுக்குச் சொந்தமான எம்.எச்.17 விமானம் கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி கோலாலம்பூர் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

பயணிகள் மற்றும் ஊழியர்கள் என 298 பேருடன் சென்று கொண்டிருந்த அந்த விமானம் ரயா – உக்ரைன் எல்லைக்கு அப்பால் சுமார் 50 கி.மீ தொலைவில் பறந்து கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. அந்த விமானம் கடலில் விழுந்து, நொறுங்கியதாகக் கூறப்பட்டது.



இது குறித்து நெதர்லாந்தைத் தலைமையிடமாக கொண்டு செயல்படும் சர்வதேச விசாரணை குழு நடத்திய விசாரணையில் சம்பவம் நடந்த 5 ஆண்டுகளுக்கு பிறகு எம்.எச். 17 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. கிழக்கு உக்ரைன் பிரிவினை வாதிகள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியமை தெரியவந்தது.

இது தொடர்பாக ரஷ்யாவை சேர்ந்த 3 பேர் மற்றும் உக்ரைன் நாட்டை சேர்ந்த ஒருவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. இது தொடர்பான வழக்கு விசாரணை, நெதர்லாந்தில் அடுத்த ஆண்டு (2020) மார்ச் மாதம் தொடங்குகிறது.

இந்த நிலையில், எம்.எச். 17 விமானத்தைச் சுட்டு வீழ்த்திய கிழக்கு உக்ரைன் பிரிவினைவாதிகளை ரஷ்யாவின் உயர் அதிகாரிகள் வழிநடத்தினர் எனச் சர்வதேச விசாரணைக்குழு குற்றம் சாட்டி உள்ளது.

இது தொடர்பாக அந்த குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்ய அதிபர் புடினின் மூத்த உதவியாளர் ஒருவர் கிழக்கு உக்ரைனிலுள்ள பிரிவினைவாதிகளுடன் தொலைபேசி வழியாகத் தொடர்பில் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. எனினும், இந்த குற்றச்சாட்டை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

# உயிரியல்,இரசாயன,அணு ஆயுதங்களின் தொழில்நுட்பத்தைப் பெற பாக். எத்தனம்

## இரகசிய முயற்சி குறித்து ஜேர்மனி திடுக்கிடும் தகவல்

பேர்லின்,நவ.17

உயிரியல் மற்றும் வேதியியல் (இரசாயனவியல்),அணு சக்தி ஆயுதங்களில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தை சட்டவிரோதமாக வாங்க பாகிஸ்தான் ஆர்வம் காட்டி வருவதாக ஜேர்மன் அரசு தெரிவித்து உள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர் டை லிங்கே, இடது சாரி கட்சியின் செவிம் டாக்டெலன் உள்பட பலர் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அளித்து உள்ள அதிகாரபூர்வ பதிலில் ஜேர்மன் அரசு இதனை தெரிவித்து உள்ளது.

ஜேர்மனியின் உள்நாட்டு உளவுத்துறை சேவை அமைப்பு தெரிவித்துள்ள தகவல்களின் அடிப்படையில் ஜெர்மன் அரசு பதில்,அளித்து உள்ளது.

அணுசக்தி உயிரியல் மற்றும் வேதியியல் பொருள்களை இரகசியமாகக் கொள்முதல் செய்வதற்கான பாகிஸ்தானின் முயற்சிகள் சமீபத்தில் அதிகரித்து வருகின்றன என அதில் கூறப்பட்டு உள்ளது.

## உலகச் செய்தித் துளிகள்

* பிரான்ஸின் தென்கிழக்கு பகுதியில் கடுமையான பனிப்பொழிவு காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டு உள்ளது. இதனால் சுமார் 2 லட்சம் வீடுகள் இருளில் மூழ்கி உள்ளன.

* பொலிவியாவில் அதிபர் இவோ மோரலஸ் பதவி விலகிய பிறகு அந்த நாட்டின் புதிய வெளியுறவு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள கரென் லோங்காரிக், ஐ.நா. சபை மற்றும் கியூபா நாட்டுக்கான தூதர்கள் இருவரைப் பணியில் இருந்து நீக்கினார்.

* ஜனநாயக கட்சியினர் தனக்கு எதிராக நடத்தி வரும் பதவி நீக்க விசாரணை தனது குடும்பத்தினருக்குக் கடுமையான வலிகளைக் கொடுத்திருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வேதனை தெரிவித்துள்ளார்.

* பாலஸ்தீனத்தின் காசா நகரில் நடைமுறைப்படுத்தப்பட்ட சண்டை நிறுத்தத்தை மீறி பி.ஜே.ஜே. பயங்கரவாத அமைப்புகளின் நிலைகளைக்குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் வான்தாக்குதல் நடத்தியது.

* ரோஹிங்கியா முஸ்லிம்கள் சட்டவிரோதமாக மலேசியாவுக்குச் செல்ல படகில் பயணித்த போது, அவர்களது படகு வங்காள விரிகுடா கடலில் கோளாறு ஏற்பட்டு நின்றது. மீனவர்கள் அளித்த தகவலின் பேரில் படகில் சிக்கியிருந்த 122 ரோஹிங்கியா முஸ்லிம்களை வங்காளதேசக் கடற்படையினர் மீட்டனர்.

## இறந்த பாம்பையே கயிறாக்கி ஸ்கிப்பிங் விளையாடிய சிறுசுகள்

வியட்நாமில் இறந்த பாம்பினைக் கொண்டு சிறுவர்கள் 'ஸ்கிப்பிங்' விளையாடிய வீடியோ வைரலாகி வருகிறது.

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. பாம்பு உயிரோடு இருந்தால் மட்டும் அல்ல இறந்து கிடந்தால் கூட அதனை பார்த்து நடுங்குவது மனித இயல்பு. இந்நிலையில் வியட்நாமில் இறந்த பாம்பை வைத்து சில சிறுவர், சிறுமியர் ஸ்கிப்பிங் விளையாடியமை தொடர்பான வீடியோ சர்வதேச அளவில் வைரலாகி வருகிறது.

வியட்நாமின் வனப்பகுதியை ஒட்டிய கிராமத்தில் சில சிறுவர்கள் விளையாடுவதற்கு ஏதும் கிடைக்காமல் சுற்றித் திரிந்தனர். அப்போது அப்பகுதியில் பாம்பு ஒன்று இறந்து கிடந்ததைக் கண்டனர். இறந்த பாம்பை கண்டு, சிறுவர் பட்டாளம் சிறிதும் பதற்றப்படவில்லை. மாறாக தங்களுக்கு விளையாட அருமையான பொருள் ஒன்று கிடைத்து விட்டது என்றெண்ணி உற்சாகமடைந்தனர்.

ஆரவாரத்துடன் இறந்த பாம்பைக் கையில் எடுத்த அவர்கள், கயிறுக்குப்பதிலாக பாம்பின் உடலை கொண்டு ஸ்கிப்பிங் விளையாட தீர்மானித்தனர். இவர்களது இந்தச் செயலை அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வீடியோ எடுத்துள்ளார்.

அதில் இறந்த பாம்பின் உடலை ஒரு சிறுவனும், சிறுமியும் இரு முனைகளை பிடித்து சுழற்ற நடுவில் நின்றிருந்த சிறுமி உற்சாகமாக துள்ளிக் குதித்து ஸ்கிப்பிங் ஆடுகிறாள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் இறந்த பாம்பின் உடலை வைத்து வாண்டுகள் அடித்த லூட்டியை, வீடியோ பதிவு செய்த பெண், அவர்களுக்கு உற்சாக மூட்டுகிறார். தற்போது இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



# அமெரிக்காவில் அரை நிர்வாணமாக வந்து விருது வாங்கிய சிலி நாட்டுப் பொப் பாடகி

## தன் தேச துயரங்களை வெளியிடும் உத்தியாம்

சாண்டியாகோ,நவ.17

அமெரிக்காவில் நடந்த விழாவில் பொப் பாடகி ஒருவர் அரை நிர்வாணமாக வந்து விருது பெற்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தென் அமெரிக்க நாடான சிலியில் மெட்ரோ ரயில் கட்டணத்தை அரசு உயர்த்தியதை கண்டித்து மக்கள் போராட்டத்தில் குதித்தனர். தலைநகர் சாண்டியாகோ உள்பட நாட்டின் முக்கிய நகரங்களில் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தினர். மக்களின் தொடர் போராட்டத்துக்கு அடிபணிந்த அரசு மெட்ரோ ரயில் கட்டண உயர்வை ரத்துச் செய்தது.

ஆனாலும் நாட்டில் நீண்டகாலமாக நடந்து வரும் கொலை, பாலியல் வன்முறை மற்றும் இராணுவத்தினரின் சித்திரவதை ஆகியவற்றைக் களைய அரசமைப்பை மாற்றியமைத்து, சமூக சீர்திருத்தங்களைக் கொண்டு வரக் கோரி மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்தப் போராட்டம் தொடங்கியதில் இருந்து 20 பேர் கொல்லப்பட்டனர். மேலும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் நடைபெற்ற லத்தீன் கிராமி விருதுகள் வழங்கும் விழாவில் சிலி நாட்டை சேர்ந்த பிரபல பொப் பாடகி மோன் லாபர்டே (வயது 36) சிலி அரசை கண்டிக்கும் விதமாக அரை நிர்வாணத்தில் வந்து தனக்கான விருதை வாங்கி கவனம் ஈர்த்தார்.




மோன் லாபர்டே மேலாடை அணியாமல் தனது மார்பகத்தின் மேலே சிலியில் சித்திரவதை, கற்பழிப்பு மற்றும் கொலை செய்கிறார்கள் எனக் கருப்பு நிறமையில் எழுதியிருந்தார்.

விழாவில் அவருக்கு சிறந்த மாற்று ஆல்பத்துக்கான விருது வழங்கப்பட்டது.

# கட்சித் தலைவர்கள் வாக்களிப்பு







யாழ்ப்பாணம், நவ. 17

வடக்கில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்று ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் நேற்றுக் காலை வாக்களித்தனர்.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் மற்றும் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஆகியோரும் வாக்களித்தனர். (ஐ)

## வட்டுக்கோட்டையில் காணாமற்போன குடும்பப் பெண் நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 17

வட்டுக்கோட்டையில் காணாமற்போன குடும்பப்பெண் ஒருவர் 5 நாள்களின் பின் பாழடைந்த கிணற்றில் சடலமாகக் காணப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மையாக நவீன சந்தைக் கட்டடத்துக்கு அருகாமையில் (இந்து வாலிபர் சங்க புத்தகசாலைக்கு பின்புறம்) உள்ள பாழடைந்த கிணற்றில் அவரது சடலம் காணப்பட்டது.

சங்கரத்தை, திருஞான சம்பந்தா வீதியைச் சேர்ந்த மகேந்திரம் யசோதா என்ற ஒரு பிள்ளையின் தாயாரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குடும்பப் பெண் கடந்த திங்கட்கிழமை (நவம்பர் 11) தொடக்கம் காணாமற்போனார் என்று அவரது மகன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹப்புத்தளையில் மோதல்

*கொழும்பு, நவ. 17*

*ஹப்புத்தளையில் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்துள்ளனர்.*

*இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.*

*இரண்டு ஆண்கள் மற்றும் பெண் ஒருவர் உள்ளிட்டவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இவ்வாறு மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.*

*சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)*

## வாக்காளர்களை ஏற்றி வந்த பஸ்கள் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, நவ. 17

புத்தளத்தில் இருந்து மன்னார் – சிலாவத்துறைநோக்கிவாக்காளர்களை ஏற்றி வந்த இரண்டு அரச பேருந்துகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்னார்சிலாவத்துறையில்உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்காக, புத்தளத்தில் உள்ள வாக்காளர்களை ஏற்றிக் கொண்டு வந்த இரண்டு அரச பேருந்துகள் மீது நேற்றுக் காலை தந்திரிமலைப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஒரு பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட அதேவேளை, மற்றொரு பேருந்து மீது கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதில், எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும் பேருந்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்திய நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. (ஐ)






# நேற்றைய ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த பிரபலங்கள்

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ நேற்று அம்பாந்தோட்டையில் வாக்களித்தார்.







ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுக் கொழும்பில் வாக்களித்தார்.



8ஆவது ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் வாக்களித்தார்.

## கொழும்பு றோயலில் ரணில்







பிரதமர் ரணில் விக்ரமசிங்க கொழும்பு றோயல் கல்லூரியில் உள்ள வாக்குச் சவாடியில் வரிசையில் நின்று நேற்று வாக்களித்தார்.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தனது வாக்கைச் செலுத்தினார்.

## மஹிந்த குடும்பம் தங்காலையில்

முன்னாள் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தமது குடும்பத்தவருடன் நேற்று தங்காலையில் வாக்களித்தார்.





## பொலன்னறுவையில் ஜனாதிபதி



ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று முற்பகல் பொலன்னறுவை புதிய நகரத்திலுள்ள ஸ்ரீ வித்தியாலோக்க விகாரையில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

ஜயந்தி சிறிசேன அம்மையார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் சகிதம் நேற்று முற்பகல் வித்தியாலோக்க விகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் அங்கு தமது வாக்கைப் பதிவு செய்த ஜனாதிபதி வாக்களிப்பு நிலையத்திற்கு வருகை தந்திருந்த பொதுமக்களுடன் சுமூக கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க கொழும்பில் தனது வாக்கைச் செலுத்தினார்.



கொழும்பு-3 இல் மெதடிஸ்ட் கல்லூரியில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது பாரியாருடன் சென்று வாக்களித்த போது...





கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வாக்களித்தார்.

காலைக்கதிர் Kalaikathir



சபரிமலை ஸ்ரீஜயப்பனுடை மண்டல விரதத்திற்கு மாலையிடும் தினம் இன்றாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.



# வேண்டுபவர் வேண்டுதல்களை நிறைவேற்றும் ஐயப்ப சுவாமி

விஷ்ணு பகவான் மற்றும் சிவபெருமானின் புதிரான புதல்வனைப் பற்றி எப்போதாவது நீங்கள் கேள்வி பட்டிருக்கிறீர்களா? விஷ்ணு பகவானின் குழந்தைக்கு தந்தையாக விளங்கியவர் சிவபெருமான். ஆம், இன்றளவும் இந்து மதத்தின் முக்கிய கடவுளாக விளங்குகிறார் அந்த புதல்வன். அந்தக் கடவுள் வசிக்கும் கோவிலுக்கு இன்றளவும், ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து அவரைத் தரிசிக்கின்றனர். அந்த புனித ஸ்தலம் கேரளாவில் உள்ளது. 41 நாள்கள் விரதம் இருந்து இங்கே லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். ஆம், நீங்கள் யூகித்தது சரியே. நாங்கள் கூறி கொண்டிருப்பது சபரிமலையில் உள்ள ஐயப்ப சாமியைப் பற்றித் தான்.

சிவபெருமான் மற்றும் மோகினிக்கு (பெண் வடிவிலான விஷ்ணு பகவான்) பிறந்தவர் தான் ஐயப்ப சாமி. மகிஷி என்ற அரக்கியை அழிக்கவே இவர் அவதரித்தார். பிரம்ம தேவனிடம் வரத்தை பெற்ற பிறகு இந்த அரக்கி பல துன்பங்களை இழைத்து வந்தார். ஐயப்ப சாமியை மணிகண்டன் என்றும் அழைப்பார்கள். அவரை தத்தெடுத்து வளர்த்தவர்



ராஜசேகர அரசன்.

ஐயப்ப சாமி திருமணமாகாதவர் என்று நம்பப்படுகிறது. அதனால் கழுத்தை சுற்றி நகையுடன் ஒரு யோகி நிலையில் அமர்ந்திருப்பதை போல் வடிவமைக்கப்பட்டுள்ளார். ஐயப்ப சாமியின் முதன்மையான சன்னிதானம் சபரிமலையில் உள்ளது. இங்கே தான் அவர் வசித்தார் என்று நம்பப்படுகிறது. உலகத்தில் உள்ள மிகப்பெரிய புனித ஸ்தலங்களில் இதுவும் ஒன்றாகும். ஐயப்பனுக்கு கடைப்பிடிக்க வேண்டிய விரதம் மற்றும் சடங்குகளை சரிவரக் கடைப்பிடித்தால், நம் ஆசைகள் அனைத்தும் நிறைவேறும் என்பது நம்பிக்கையாகும்.

இரண்டு ஆண் கடவுள்களுக்கு பிறந்தவர் ஐயப்பன் என்ற பின்னணியில் உள்ள புதிர் என்னவென்று தெரிய வேண்டாமா? தொடர்ந்து படியுங்கள்.

## மகிஷி: அரக்கி

மகிஷாசுரனை துர்கையம்மன் அழித்த போது அவனின் தங்கையான மகிஷி வெறி கொண்டாள். அவள் அண்ணனின் சாவிற்கு பழி தீர்க்க முனைந்தாள். நீண்ட தவத்தில் ஈடுபட்டு பிரம்ம தேவனைக் குளிர வைத்தாள். விஷ்ணு பகவான் மற்றும் சிவபெருமானின் புதல்வனைத் தவிர வேறு எந்த ஓர் ஆண் மற்றும் பெண்ணாலும் தனக்கு ஆபத்து நேரக் கூடாது என்ற வரத்தை பெற்றார். இரண்டு ஆண்கள் சேர்ந்து குழந்தை பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால், மகிஷி இவ்வகை வரத்த பெற்றாள். அதன் பின், அண்டத்தில் வாழ்ந்த அனைவருக்கும் துன்பத்தை இழைக்க ஆரம்பித்தாள்.

அனைத்து கடவுள்களும் விஷ்ணு பகவான் மற்றும் சிவபெருமானை அணுகி, இந்த அரக்கியை அழிக்க உதவி கோரினார்கள். அப்போது விஷ்ணு பகவான் ஒரு திட்டத்தைத் தீட்டினார். சமுத்திர மந்தன் பாற்கடலை கடையும் போது, அசுரர்கள் கையில் அமிர்தம் கிடைக்கக் கூடாது என்ற காரணத்தினால் விஷ்ணு பகவான் மோகினி வடிவத்தில் பெண்ணுருவத்தை எடுத்தார். அதனால், மீண்டும் மோகினி வடிவத்தை எடுத்தால், சிவபெருமானுடன் சேர்ந்து ஒரு புனித புதல்வனை பெற்றெடுக்கலாம் என்று தீர்மானித்தார். அந்த புதல்வன் துர்கையின் சக்தியுடன் சேர்த்து மகிஷியை அழிப்பான் என்றும் தீர்மானித்தார்.

## மணிகண்ட இளவரசர்

ஐயப்ப சாமி பிறந்தவுடன், அவருடைய புனிதமான பெற்றோர்கள் அவருடைய கழுத்தை (கண்டன்) சுற்றி தங்க மணியை கட்டி, அவரை பம்பை நதியில் விட்டார்கள். வாரிசில்லா அரசரான ராஜசேகரா அந்த நதியைக் கடக்கும் பொது அந்த சிறுவனை அங்கே கண்டெடுத்தார். மணிகண்டனை தத்தெடுத்து தன் சொந்த மகனை போல் வளர்த்தார். அதன் பின் அவருக்கென ஒரு மகனும் பின்னாளில் பிறந்தான். இருப்பினும் மணிகண்டனுக்கே மணிமகுடம் சூட்ட ஆசைப்பட்டார். ஆனால் மகாராணிக்கு தன்னுடைய சொந்த மகனே அரசாள வேண்டும் என்று ஆசை இருந்தது. அதனால் குணமடைய முடியாத ஒரு நோய் தனக்கு வந்துள்ளது என்று கூறி, மணிகண்டனைக் கொல்லத் திட்டமிட்டார். மகாராணியின் ஆணைபடி, அவருக்கு வந்த வியாதியைக் குணப்படுத்த புலிப்பால் தேவை என்று மணிகண்டனிடம் மருத்துவர் கூறினார். அதனால் மகாராணிக்காக பாலை தேடி அவர் வெளியேறினார்.

தன் தாயின் வேண்டுகோளை ஏற்று புலிப்பால் கொண்டுவர கானகம் செல்லப் புறப்பட்டான் மணிகண்டன். மன்னனின் மனம் கலங்கியது. ‘மகனே உனக்கு முக்கண்ணன் துணையிருப்பான்’ எனக்கூறி முக்கண் உடைய தேங்காயில் நெய்நிரப்பி மற்றும் பூஜைக்குரிய பொருள்கள் சேர்த்து ஒரு முடி கட்டி மற்றத்தில் அவன் வழியில் உண்ண வேண்டி உணவும் கட்டி அனுப்பி வைத்தான். இதனையே இன்று இருமுடி என அழைக்கின்றனர்.

ஐயப்பன் மணி கண்ட பாலகனாக காட்டுக்குச் சென்று அங்கு மகரஜோதி காண்பிக்கப்படும் பொன்னம்பல மேட்டில் தான் யார் என்பதை உலகம் அறியும் வண்ணம் ஜெயந்தன் என்ற நம்பூதிரிக்கு காட்சி கொடுத்தான்.

## மகிஷியை கொன்றார் ஐயப்பன்

புலிப்பால் எடுக்க சென்ற வழியில், மகிஷியை சந்தித்தார் மணிகண்டன். அவர்கள் இருவருக்கும் பெரிய சண்டை உருவாகி, அழுதா ஆற்றங்கரையில் மகிஷியை கொன்றார் மணிகண்டன். புலிப்பாலைத் தேடி சென்ற இடத்தில், சிவபெருமானைச் சந்தித்து தன் பிறப்பின் இரகசியத்தை தெரிந்துக் கொண்டார் மணிகண்டன்.



## சபரிமலையில் ஐயப்பன்

அப்போது தேவேந்திரர்கள் வந்து அவரை வணங்கி எல்லா தேவதைகளும் அவருக்கு பதினெட்டுப் படியாக மாறிஒருபீடத்தைஅமைத்துக் கொடுத்து ஜோதியாக காட்சி கொடுக்கச் செய்தனர். பின்னர் புலிப்பாலுடன் புலிக் கூட்டத்தினருடன் புலியின் மேல் இருந்து ஐயப்பன் அரசனுக்கும் அரசிக்கும் காட்சி கொடுத்தான். தான் வந்த நோக்கம் நிறைவடைந்ததாகக் கூறி தந்தையிடம் ஆசி பெறச் சென்றான்.

வருந்திய தந்தைக்கு ‘சபரிமலைப் பகுதியில் ஓர் அம்மைப எய்கிறேன். அது எங்கு போய் நிற்கிறதோ அங்கு எனக்கு ஓர் ஆலயம் அமைத்து வழிபடுங்கள். மகர சங்கிராந்தியன்று நான் ஜோதி வடிவில் பொன்னம்பல மேட்டில் காட்சி தருவேன்’– எனக் கூறி அதன்படி சபரி மலையில் பதினெட்டுப் படியுடன் கூடிய ஆலயத்தில் இருந்து கொண்டு தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

ஐயப்பன் தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு ஐந்து விதத் திருக்கோலங்களில் காட்சியளிக்கிறார்.

இந்தக் கோயிலை பக்தர்கள் அடைய கடுமையான விரதத்தை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஐயப்ப சாமி திருமணம் செய்யாதவர் என்பதால், 10 – 50 வயதை உடைய பெண்கள் கோவிலுக்கு செல்ல கூடாது. கடவுளை தரிசிக்க வரும் பக்தர்கள், கடவுளை நோக்கி 18 படிகள் ஏறி



வரவேண்டும். பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றுபவர் ஐயப்ப சாமி என்று நம்பப்படுகிறது.

காகார்த்திகை மாதம் (தமிழ்) முதல் திகதி ஐயப்பன் விரதம் ஆரம்பிக்கத் தொடங்குவர். ஐயப்ப பக்தர்கள் கறுப்பு அல்லது நீல நிற உடை அணிந்து ஐயப்பன் பதக்கம் பொருந்திய துளசி மாலையை கழுத்தில் அணிந்து கொள்வர். விரதம் ஆரம்பிக்கும் நாள் கன்னி மூல கணபதியை மனதில் தியானித்துக் கொண்டு ஐயப்ப சங்க குருசாமி பக்தர்களினால் மாலை அணிய வேண்டும்.

முதல் மாலை அணிபவரை கன்னிசாமி என அழைப்பர். மூன்றாம் முறை மாலை அணிபவரை மணிகண்டன் என அழைப்பர். ஐயப்பனை வணங்கும் பக்தர்கள் கடுமையான விரதத்தினைக் கைக் கொள்வர். பிற தெய்வ வழிபாட்டிலும் முற்றிலும் வேறுபட்ட வழிபாடு ஐயப்ப வழிபாடு. பிரமச்சரிய விரதம் மிகத் தீவிரமாக கைக்கொள்ளப்பட வேண்டும்.

மன அடக்கம், புலனடக்கம் சரீர, அடக்கம் சேர்ந்து ஓர் உன்னதமான விரதத்தை கைக்கொள்வதன் மூலம் மனம் ஆசை வழிப்படாது, தியானம், ஜெபம், பஜனை ஆகியவற்றை மேற்கொண்டு, தவறான எண்ணங்களை நீக்கி, இறைவழிபாடு செய்ய வேண்டும். கள்ளங்கபடம் இல்லாத நல்ல மனதில் இறைவன் குடி கொள்வான்.

இவ்விரதம் கைக்கொள்ளும் பொழுது மது, மாமிசம், புகைத்தல் போதை வஸ்து என்று பஞ்சமா பாதகங்களை விலக்கி தைமாதம் முதலாம் திகதி அதாவது மகர ஜோதி காணும் வரை இறை வழிபாட்டுடன் இருத்தல் வேண்டும். குடும்பஸ்தர் கடும் பிரம்மச்சரிய விரதம் இருத்தல் வேண்டும். உலக ஆசாபாசங்களை நீக்கிவிட வேண்டும்.

அதாவது சினிமா பாடல்கள் கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல், சவரம் பண்ணுதல், நகம் வெட்டுதல், வாசனைப் பொருள்கள் பாவித்தல், தலையணை வைத்து உறங்குதல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எந்நேரமும் ஐயப்பனை நினைத்து பஜனை செய்தல் நன்று.

இவர் மார்கழி மாதம் பஞ்சமி திதி உத்தர நட்சத்திரம் சனிக்கிழமை பிறந்த படியால் அன்று இவருக்கு விசேட பூஜை நடைபெற்று வருகின்றது.

# ஒரு வாசகனின் நினைவு மீட்பு...!

சிறந்த வாசகர், கலைஞர், விமர்சகர் 'குமார் அண்ணன்' (குமாராசாமி குமாரதேவன்) இப்போது நம் மத்தியில் இல்லை. சுகவீனம் என்ற காலான் அவரை நம்மிடையே இருந்து பிரித்துச் சென்று விட்டான்.

எந்தப் பத்திரிகையிலும் அரசியல், பொதுக் கட்டுரைகளில் கருத்துத் தவறு இருந்தால் அதை உடனேயே ஆசிரிய பீடத்துக்குத் தொலைபேசி எடுத்துத் தனது பெயர் குறிப்பிட்டு, திருத்தச் சொல்லும் துணிச்சல்காரர். மொத்தத்தில் ஒரு தகவல் களஞ்சியம். அவருக்குப் பயந்தே பல கட்டுரையாளர்கள் தங்கள் கட்டுரைகளின் தகவல்கள் பற்றிய உண்மைத் தன்மையை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் உறுதி செய்துதான் எழுதுவார்கள். அவரது இறுதிக் கிரியைகள் இன்று யாழ்ப்பாணத்தில் நடக்கும் சமயத்திவ் அவரது நினைவை மீட்கிறது இந்த ஆக்கம்.

அவர் தன் வாய் வழியாக இரைமீட்ட பட்டறிவுப் பாடத்தை அவரது பேச்சு மொழிச் சொல்லாடலிலேயே தொகுத்து எழுதியவர் கிரிஷாந்த்.'புதிய சொல்' இதழில் 2016 ஏப்ரல் – ஜூன் பதிப்பில் வெளியான குமார் அண்ணனின் அனுபவப் பகிர்வு இது.



### சுய கதை

பதின்மூன்று வயதிலேயே பள்ளிக்கூடம் போவதை விடவேண்டியதாயிற்று. அப்பாவின் திடீர் மரணத்துடன் அப்பாவின் கடைக்குப் போகவேண்டிய சூழல் ஏற்பட்டது. தகப்பனார் மலையகத்தில் உள்ள நாவலப்பிட்டியாவில் வியாபாரம் செய்துவந்தார். அம்மா பிறந்தது மலாயாவில். பிறகு அவரது குடும்பத்தார் பென்சன் எடுத்துக் கொண்டு ஊரோடு வந்து இருந்துவிட்டனர். எனக்கு அப்ப யாழ்ப்பாணமே கூடத் தெரியாது, முதல் நகரம் என்றாலே நாவலப்பிட்டியாதான். நாவலப்பிட்டியாவிலும் ஒரு தமிழ்ச்சூழல்தான், பெரிய தோட்டங்களும் தோட்டத் தொழிலாளர்களும் வாழ்ந்த பெருந்தமிழ்ப்பரப்பு.

ஏராளமான தமிழ் வாசிப்பு அங்குதான் உருவாகியது. சிறுவயதிலேயே பத்திரிகைகளை வாசிப்பதில் ஆர்வம் கூட, அந்தக் காலத்தில் பொதுமக்கள் பத்திரிகை வாசிப்பது குறைவு, எனது வாசிப்பு ஆர்வத்தைப் பார்த்த எனது உறவினர் ஒருவர் அவர் ஒரு மலாயன் பென்சனியர், அவருக்குத்தான் வீரகேசரிப் பேப்பர் வரும். தான் வாசித்துவிட்டு பத்திரிகைகளை எனக்குத் தருவார். எனது ஆர்வத்தைப் பார்த்த தந்தையும் அவரது கடைக்கு வரும் பேப்பரை அவர் வாசித்தவுடன் தபாலில் போட்டுவிடுவார். அந்தக் காலத்தில் ரெண்டு நேரப் பாடசாலைதானே, மத்தியானம் சாப்பாட்டுக்கு சைக்கிளில் வரும்போதே பேப்பர் பார்த்துக்கொண்டுதான் வருவன், தபாலில் வந்த பேப்பரை உடைச்சு, அதையும் கையில் வைத்துப் பார்த்துகொண்டுதான் சாப்பாடே நடக்கும். பிறகு, எனது ஊரில் இருந்த முகவர் ஒருவர் எனக்கும் சேர்த்து ஓடரைச் செய்துவிட்டார்.

நா. முத்தையா மாஸ்ரர் என்பவரது ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டியாவில் இயங்கியது. மலையகத்தின் பிரதான அச்சகமாக அது இருந்தது. அவர் திருமணம் முடிக்காதவர், சமய ஈடுபாடு நிறைய உள்ளவர். அந்தச் சூழல் பெரிய கேந்திரமாக அந்தக் காலத்தில் இருந்தது.

நாவலப்பிட்டியில் நிறைய உறவினர்கள் இருந்தார்கள், அங்கு அறுபது வீதத்திற்கு மேற்பட்ட கடைகள் தமிழ்க்கடைகள்தான், இந்திய வம்சாவளி செட்டிமார் கடைகள், யாழ்ப்பாணத்து ஆட்களின் கடைகள் என்று எல்லாம் இருக்கும். நாவலப்பிட்டிய ரெயில்வே ஸ்டேசன் பெரிய ஒரு நிலையம். இப்பொழுதும்கூட கொழும்பு, யாழ்ப்பணத்திற்கு அடுத்து பெரிய இடம் அதுதான்.

படிப்பை விட்டதாலேயே என்னமோ தெரியவில்லை, எதையாவது வாசிக்கவேணும் என்ற ஆர்வம் இருந்தது, பேப்பர்கள், அதுகள், இதுகள் என்று வாசிப்பன், ஒருவேளை பள்ளிக்கூட படிப்பிற்குப் போயிருந்தால், வேறு மாதிரியும் போயிருக்கலாம். அந்தக் காலத்தில் பழைய பத்திரிகைகள் விற்கும் நாடார் கடைகள் இருந்தன, அங்கே எஸ்டேட்டைச் சேர்ந்தவர்கள் வாசித்த ஏராளமான புத்தகங்கள் வரும். அவற்றை மிகக் குறைந்த விலைக்கு நிறுத்து வாங்கலாம். நானும் கடைக்காரன் என்றபடியால் கேட்கும் விலைக்குத் தருவினம். தீபம் இதழ்கள் மற்றும் அந்தக் காலத்தில் வந்த தரமான இதழ்கள் எல்லாமும் கூட எடுக்கக்கூடியதாக இருக்கும்.

அந்த நேரத்தில், எனக்கு முதலில் அறிமுகமாகியவர், நாவலப்பிட்டி உதவித் தபாலதிபர் ரட்ணசபாபதி அய்யர். அவரும் நல்ல வாசிப்பாளர், கவிதைகளும் எழுதுவார். ஓய்வா. நேரங்களில் கடையில் வந்து எங்களோடு கதைத்துக் கொண்டிருப்பார். ஒருநாள் அவர் கிராமப்பிறழ்வு என்ற மார்ட்டின்விக்கிரமசிங்கவின் நாவலான கம்பெரலியவைத் தந்தார். அது அந்தக்காலத்தைய எனது ஆர்வத்திற்குத் தீனி போட்டது. அன்றைய சிறிமாவோ ஆட்சிக்காலத்தில்தான் இந்தியப் பிரசுரங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. வீரகேசரிப் பிரசுர வெளியீடுகள் நிறைய வந்தன. அப்போது எங்கள் கடைக்கு எதிரில்தான் வீரகேசரி முகவர் நிலையம் இருந்தது, புதியதாய் வரும் புத்தகங்களையே கூட வாசிக்கத் தருவார்கள். நிலக்கிளி தான் நான் அப்போது வாசித்தவற்றுள் நல்ல நாவல்.பாலமனோகரன் என்பவரால் எழுதப்பட் டது. வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த தண்ணிமுறிப்பு, தண்ணீரூற்று போன்ற இடங்களை மையமாகவைத்து ஒரு காதல் கதை, சாதியத்தையும் அதன் நிலவியலையும் கூட அது விரிவாகப்பேசியது. சிறியவயதில் வாசித்ததால் தான் அவ்வளவு நன்றாக இருந்தது என்று நினைத்தேன், ஆனால் இரண்டாவது பதிப்பைச் சிலவருடங்களுக்கு முன் வாசித்தபோதும் அதே உணர்வையே தந்தது.

அதன் பிறகு மல்லிகை இதழை சேல்ஸ் ரெப்பாக இருந்த மகாலிங்கம் என்பவர் தந்தார். அவர் மலையகச் செய்திக்கட்டுரைகள் என்ற தொடரை மல்லிகையில் எழுதினார். சுதந்திரன், சுடர் போன்றவையும் வாசிக்கக் கூடிய அளவில் வெளிவந்தன. சுடர் ஒரு ரூபாய்க்கு, நிறைய வாசிக்கக் கூடிய விடயங்களுடன் வெளிவந்தது. அதே காலத்தில் சாகித்தியவிழாக்களும் கதிரேசன் மண்டபத்தில் நடந்தன.

1977 இல் ஆட்சிமாற்றம் போன்றன ஏற்பட்டு ஒரு கலவரமான சூழ்நிலை நிலவியது. மேலும் சிறு வயதில் ஓரளவு வெளி உலகத்தைப் பார்க்க வெளிக்கிடேக்க யாழ்ப் பணத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழாராய்ச்சி மாநாட்டு சம்பவங்கள் என்பவற்றைத் தாங்கி செய்திகள் வந்தன. வீஷழிஷ்யி ழிமி ணுழிஷ கேஸ் என்பன பெரிய எழுச்சியை ஏற்படுத்தியிருந்த காலமது.

பொதுவாக தேர்தல் காலமென்றாலே தமிழர்களைத் தாக்கும் சூழ்நிலை ஒன்று இருந்தது. தேர்தலுக்கு முன்னமே கலவரம் உருவாகக்கூடிய சாத்தியங்கள் தெரிந்தன. யார் வென்றாலும் தமிழ்க்கடைகளைச் சூறையாடுவதும், வெற்றியடைந்தவர்கள் தமிழ்க்கடைகளில் அதைக் கொண்டாடும் மனோநிலையும் இருந்தது. ஆகவே 77 தேர்தலுக்கு முன்னமே, உறவினர்கள் என்னை ஊருக்கு அனுப்பிவிட்டார்கள்.

### புதிய நகரத்தின் சுருக்கம்

நான் யாழ்ப்பாணத்துக்கு வந்ததும், ஜே ஆர் ஆட்சிக்கு வந்ததும் 1977 ஆம் ஆண்டிலேயே நடந்தது. தொடர்ச்சியாக எதிர்பார்த்தவாறே நிகழ்வுகள் தொடர்ந்தன. கலவரங்கள் மூண்டன. அதில் ஆத்மஜோதி நிலையமும் எரிக்கப்பட்டது. பின்னர் நான் யாழ்ப்பாண சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழத்தொடங்கினேன். அப்போதும் ஒரு ரெண்டுங்கெட்டான் நிலைதான் காணப்பட்டது. படிக்கமுடியவில்லை என்ற ஏக்கம் இருந்தது; அதைமாற்ற நிறைய வாசிக்கவும் செய்தேன்.

1977 இற்குப் பிறகு யாழ்ப்பாணம் சிவன்கோயிலடிதான் வாழ்வு. 'ஈழத்துச் சிதம்பரம்' என அழைக்கப்படும் சிவன் கோவில் அமைந்துள்ள காரைநகரில் இருந்து

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் என பெயர் பெற்ற யாழ் நகர சிவன் கோவிலடிக்கு வந்து சேர்ந்ததும் ஒரு புதினமான ஒற்றுமைதான். சிவபெருமானின் ஜென்ம நட்சத்திரமான 'ஆதிரை'யை பெயராகக்கொண்டது சயந்தனின் பின்னாளில் வெளியான நாவல். அந்நாவலில் ஆதிரை களத்தில் நின்று சிவபெருமானை சப்போட் டுக்கு கூப்பிடும் வர்ணனை ஞாபகம் வருகிறது. யாழ்நகர சிவன் கோயிலடி ஆறுமுகநாவலர் தனது தொடர்பிரசங்கங்களை நிகழ்த்திய இடம். பின்னர் நல்லை ஆதீனத்தை நிறுவிய மணி ஐய்யர் என ஆரம்பத்தில் அழைக்கப்பட்டவர் வசித்ததும் வெண்கலக் குரலில் கதாப்பிரசங்கங்களை நிகழ்த்தியதும் யாழ்நகர சிவன்கோயிலடியே. செட்டியார்களால் அமைக்கப்பட்டதால் இக்கோவில் செட்டியார் சிவன்கோவில் என்றும் அழைக்கப்படும்.

யுத்தத்திற்கு முதல் சொந்த தொழில் இருந்தது, பின்னர் நெருக்கடிச்சூழலில் அறிமுகரீதியிலும் பழக்கரீதியிலும் சண்முகம் உணவகத்தில் முதலில் பகுதிநேரமாகவும் பின்னர் கிட்டத்தட்ட முழு நேரமாகவும் வேலை செய்யக்கூடியதாயிருந்தது. சண்முகம் உணவகம் சைவ உணவுக்கு மாத்திரமல்ல உபசரிப்புக்கும் பெயர் பெற்றது. அதன் உரிமையாளர் ஊழியர்களை எதிர்பாராமல் தானே நின்று சகல வேலைகளையும் செய்வார். அவரது கையினால் ரீ குடிக்கவென தொலைவிலிருந்தும் வாடிக்கையாளர் வருவர். அயலில் அலுவலகம் வைத்திருந்த மல்லிகை ஜீவா அந்தக்கடையின் வாடிக்கையாளர். மல்லிகை ஆண்டு மலர் ஒன்றின் ஆசிரியர் தலையங்கத்தில் சண் முகம் அண்ணையைப் பற்றிக் குறிப்பிட்டு முதியிருப்பார். எழுத்தாளர்

தெணியான் தனது நூலொன்றில் சண்முகம் உணவகத்தைப் குறிப்பிட்டிருப்பார். 1995 இடப்பெயர்வுகாலத்தில் சங்கத்தானையில் இயங்கிய சண்முகம் உணவகம் குறித்து அருண்மொழிவர்மன் உதயனில் எழுதியிருந்தார். செட்டியார் அச்சக உரிமையாளர் திரு. சங்கர் உணவகத்தின் தினசரிவாடிக்கையாளர். அவர் சுதந்திரன் ஆசிரியராக இலக்கியப்பகுதிக்கும் பொறுப்பாளராக இருந்தபோதே எஸ்.பொ அவர்களின் 'சடங்கு' நாவல் தொடராக வெளிவரத்தொடங்கியது. பின்னர் நூலுருப்பெற்றது. சடங்கு நாவலின் முன்னுரையில் எஸ்.பொ இது பற்றிக் குறிப்பிட் டுள்ளார். உணவகம் பல இலக்கியவாதிகள் வந்து சந்தித்து உரையாடக்கூடிய ஓர் இடமாகவும் இருந்தது.

### குடும்பத்தின் சுருக்கம்

திருமணம் முடிக்கவில்லை . நாட்டுச் சூழலும் ஒரு காரணம்; இராணுவக் கெடுபிடிகளும் அதுகளும் இதுக்களுமாய் இருந்த காலம். இன்னொரு பக்கத்தால், ஏன் திருமணம் முடிக்கவில்லை , இவன் ஏதேனும்



இயக்கமாக இருக்குமோ என்றும் கூட அவர்களை அது யோசிக்க வைத்தது. பல தடவை இந்தக்கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டியிருந்தது. உதாரணத்திற்கு, ஒரு தடவை ஓர் உயரதிகாரி கேட்டார், 'நீர் ஏன் திருமணம் முடிக்கவில்லை?' நான் சொன்னேன், 'இந்த உலகத்தில் எத்தனைபேர்திருமணம் முடிக்காமல் இருக்கினம், ஏன் இலங்கையிலே கூட திருமணம் முடிக்காதவர்கள் எத்தனை பேர் பிரதமர்களாக இருந்திருக்கினம்!? என்றேன். அவர் டட்லி சேனநாயக்க என்றார். சேர்.ஜோன்.கொத்தலாவல, டபிள்யு. தகநாயக்க போன்றோரும் திருமணம் முடிக்கவில்லை என்றேன். சிநேகமாகச் சிரித்தார்.

பிறகு கொஞ்சக் காலம், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், பிறகு ஜனாதிபதி அப்துல்கலாமும் கூட அப்படித்தான் என்று கேட்போருக்குக்குச் சொல்லிக் கொண்டேன்.

திருமணம் முடிப்பதென்பது அவர் அவருடைய தனிப்பட்டமுடிவு, சூழ்நிலை போன்றன தொடர்பானது, அவ்வளவுதான்.

### காரை தீவு நகராகிய சுருக்கம்

வலிகாமம் நிலப்பகுதியுடன் தங்கள் ஊரைப் பிரித்து நிற்கும் நீர்ப்பகுதியை !வெள்ளக் கடற்கரை' என்றே காரைநகர்மக்கள் அழைப்பர். மிகவும் ஆழம் குறைந்த, வெள்ளம் போல் பரந்து கோடைகாலங்களில் நீர் வற்றி மணற்திடல் ஆக இப்பகுதி காணப்படும். மக்கள் பழையகாலங்களில் கால்நடையாகவே இப்பகுதியைக் கடந்து தங்கள் தேவைகளுக்குப் பிரயாணம் செய்து வந்தனர். 1878 இல் பிரித்தானிய ஆட்சியில் வடபகுதி கவர்னராக இருந்த துவைனம் (Twainam) அவர்களின் முயற்சியால் ஒன்பது நீரோட்ட மதகுகளுடன்கூடிய கற்தெரு (Cause way) அமைக்கப்பட்டு போக்குவரத்து இலகுவாகியது. பொன்னாலைச் சந்தியுடன் காரைநகரை இணைப்பதால் இத்தெரு பொன்னாலைப் பாலம் என அழைக்கப்படுகிறது.

மாரிகாலங்களில் இந்தப்பகுதி நீரோட்டம் அதிகரித்துக் காணப்படும். இந்தக் கற்தெருவில் செல்லும்போது மேகம் நீர் குடிக்கும் காட்சியை சயந்தன் ஆறாவடு நாவலில் விவரித்திருப்பார். கிழக்கு மாகாணத்திலும் காரைதீவு எனப் பெயர்கொண்ட பெரிய தமிழ்க்கிராமம் உள்ளது, சுவாமி விபுலானந்தர் பிறந்த ஊர் அது.

முன்னர் வெளியிடங்களில் இருந்து இக்கிராமங்களுக்கு தபால் அனுப்புவதாயிருந்தால் ஊர்ப்பெயருடன் யாழ்ப்பாணம் அல்லது மட்டக்களப்பு என எழுத வேண்டும். இதைவிட அரச அலுவலகங்களின் பல பணிகளிலும் குளறுபடி ஏற்பட்டது.

(13 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தியுங்கள்; உரையாடுங்கள்; மற்றவர்களுக்கு செவிசாயுங்கள்!

மக்களைச் சென்று சந்தியுங்கள், அவர்களோடு உரையாடலை மேற்கொள்ளுங்கள், இதய ஏழ்மை ஆகிய உணர்வுகளுடன் மற்றவர்களுக்கு செவி சாயுங்கள் என உரோம் நகரின் புனித ஜோன் இலாத் தரன் பசிலிக்கா நேர்ந்தளிப்புத் திருவிழாவில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டு பிறரைச் சென்று சந்திப்பது அவர்களோடு உரையாடுவது, அவர்களுக்கு தாழ்மையுடன் செவிமடுப்பது என்ற மூன்று வாக்கியங்களை ஒரு கொடையாக வழங்குவதாகத் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## மூன்று நாட்களில் அவற்றை மீண்டும் கட்டியெழுப்பி விடுவார்

ஆன்மீக உதவியுடன் இறைவனின் இருப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்து புரிந்துகொள்ள முயல்வோம் என்ற விண்ணப்பத்தையும் முன் வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். மக்களை நோக்கிச் சென்று அவர்களுக்காகப் பணிபுரியும் போது அவர்களில் ஒரு விடயம் குறித்த நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது அவசியம். நம் உறவுகள் எவ்வளவு இடிபாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் மூன்று நாள்களில் மீண்டும் கட்டியெழுப்பி விடுவார் இயேசு என்றார் அவர்.

# மட்டக்களப்பு மறைமாவட்ட ‘தொண்டன்’ இதழின் பொன் விழா







மட்டக்களப்பு, நவ.17

மட்டக்களப்பு மறைமாவட்ட இதழாக வெளவந்து கொண்டிருக்கும் சமய சமூக இலக்கிய வெளயீடான ‘தொண்டன்’ இதழானது தனது 50வது வருட பொன் விழா பூர்த்தியை நிறைவு செய்தமையிட்டு அதன் சிறப்பு நிகழ்வானது கார்த்திகைத் திங்கள் 12 ஆம் நாள் சமூகத் தொடர்பு நிலைய இயக்குனர் ஆர்.பயஸ் பிரசன்னா அடிகளரர் தலைமையில் மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜோசப்பொன்னையா ஆண்டகையும் சிறப்பு அதிதியாக திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி நோயல் இம்மனுவல் ஆண்டகையும் கலந்துகொண்டனர்.

பொன் விழா நினைவாக பொன் விழா சிறப்பு மலர் வெளயிட்டு வைக்கப்பட்டது. முதல் பிரதியினை இதழின் ஆசிரியரும் சமூகத்தொடர்பு நிலைய இயக்குனருமான ஆர்.பயஸ் பிரசன்னா அடிகளார் ஆயர் அவர்களுக்கு வழங்கினார். ஆயர் அவர்களால் நிகழ்வில் கலந்துகொண்ட திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி நோயல் இம்மனுவல் ஆண்டகை அவர்களுக்கும் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொண்டவர்களுக்கும் சிறப்புப்பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் 32 ஆண்டுகள் ‘தொண்டன்’ இதழின் இணை ஆசிரியாகப் பணியாற்றிய திரு.எஸ்.எஸ்.யேசுதாஸ் (மலர் வேந்தன்) அவர்களது சிறப்பான பணிக்காக ஆயர் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பொன் விழா நிகழ்வில் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களின் பத்தாவது நூலான ‘விடுதலைப் பயணம் – ஒரு திறனாய்வு’ என்னும் நூலானதும் வெளியிடப்பட்டது. இந்நூலின் முதற்பிரதி ஆயர் அவர்களால் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கும் சிறப்புப் பிரதிகள் வருகை தந்த கௌரவ அதிதிகளுக்கும், நிகழ்வில் கலந்கொண்டவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வினை மெருகூட்டும்வண்ணம் கலாநிதி சர்மிளா ரஞ்சித்குமரர் அவர்களது நெறியாள்கையில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மாணவிகளின் நடனங்களும் கலைக்கோட்டன் ஏ.இருதயநாதன் அவர்களது தயாரிப்பில் உருவான ‘நீங்கள் நீங்களல்ல கிறிஸ்துவே’– என்னும் நாடகமும் இடம்பெற்றது. இவ்விழாவின்போது சமூகத் தொடர்பு நிலையத்தினரால் பொன்விழா நினைவாக நடாத்தப்பட்ட கட்டுரை கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் கடந்த காலங்களில் ‘தொண்டன்’ இதழின் ஆசிரியர்களாக இணை ஆசிரியர்களாக பணியாற்றியவர்களுக்கும் ‘தொண்டன்’ குழுமத்தினருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

(செய்தியாளர் மட்டக்களப்பி இருந்து ஜே.எச. இரத்தினராஜா)

## டிஜிட்டல் உலகில் குழந்தையின் மாண்பு காக்கப்பட...

‘டிஜிட்டல் உலகில் குழந்தையின் மாண்பு’ என்ற தலைப்பில் வத்திக்கானில் நடைபெறும் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்துகொண்டோரைத் தான் சந்தித்தமை குறித்தும் திருத்தந்தை தன் உரையில் நினைவுகூர்ந்தார்.

சிறுவர், சிறுமியர் அடைந்துள்ள துன்பங்கள் குறித்து அண்மைய ஆண்டுகளில் கத்தோலிக்கத் திருஅவை சந்தித்துள்ள வேதனைகளும், சவால்களும் மிகப் பெரியவை என்பதை தன் உரையில் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தப் பிரச்சனையைத் தீர்க்க நெடுநாள் நீடிக்கும் தீர்வுகள் தேவை என்பதை வலியுறுத்திக் கூறினார்.

டிஜிட்டல் உலகம் கண்டுபிடித்துவரும் பல்வேறு தொழில்நுட்பங்கள், மக்களுக்கு, குறிப்பாக, இளையோருக்கு பெரும் உதவியாக உள்ளன என்பதை நாம் மறுக்கமுடியாது எனச்சுட்டிக்காட்டியத் திருத்தந்தை, இதே தொழில்நுட்பங்கள், இளையோரை பெரும் தீமைகளுக்கும் அழைத்துச் செல்வதை உணர்ந்து, அத்தீமைகளிலிருந்து அவர்களைக் காப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

குழந்தைகளைக் கொண்டு உருவாக்கப்படும் ஆபாச வலைத்தளங்கள், மனித வர்த்தகம், பாலியல் கொடுமைகள் ஆகியவற்றை வளர்க்கின்றன என்பதை தன் உரையில் கவலையுடன் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகையக் கொடுமைகளுக்கு உள்ளாகும் குழந்தைகளும், சிறுவர், சிறுமியரும் தங்கள் வாழ்வு முழுவதையும் வேதனையில் கழிக்கும் தண்டனைக்கு உள்ளாகின்றனர் என்று கூறினார்.

சிறுவர், சிறுமியரை டிஜிட்டல் வழியில் தவறாகப் பயன்படுத்தும் நிறுவனங்களைத் தண்டிக்கும் மற்றும், தடுத்து நிறுத்தும் வழிமுறைகளை, அரசுகள் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று திருத்தந்தை தன் உரையில் அழைப்பு விடுத்தார்.

## அகில இலங்கை தேசிய ஜூனியர் உதைபந்தாட்ட அணிகளில் இளவாலை புனித ஹென்ரியரசர் கல்லூரியில் வீரர்கள்




அகில இலங்கை தேசிய 12 வயது மற்றும் 19 வயதிற்குட்பட்ட ஜூனியர் உதைபந்தாட்ட அணிகளில் இளவாலை புனித ஹகன்ரியரசர் கல்லூரி வீரர்கள் நால்வர் இடம்பெற்றுள்ளனர்.

பாக்கியநாதன் டேவிட் டாலுங்சன், பாக்கியநாதன் றெக்சன், மரியநேசன் பிரசாந்த் மற்றும் மு.சதுர்சன் ஆகிய வீரர்களே இவ்வணிகளில் இடம்பெற்றுள்ளனர்.

ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா கழகத்தில் இடம்பெற்ற மைலோ நிறுவனத்தின் 12 வயதிற்குட்பட்ட உலக மைலோ தொடருக்காக பாக்கியநாதன் டேவிட் டாலுங்சன் இலங்கை அணிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதில் தெரிவு செய்யப்பட்ட 6 வீரர்களில் வடக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு தமிழ் வீரர் இவராவார்.

இவ்வருடம் இடம்பெற்ற 19 வயதிற்குட்பட்ட தெற்காசிய உதைபந்தாட்ட தொடர் ஆசிய தகுதிகாண் தொடர் மற்றும் ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான தொடர் என்பவற்றுக்காக இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் மூன்று வீரர்கள் இடம் பெற்றிருந்தனர்.

இதில் பாக்கியநாதன் றெக்சன் மற்றும் மரியநேசன் பிரசாந்த் ஆகியோர் நேபாளம் நாட்டில் இடம்பெற்ற தெற்காசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 19 வயதிற்குட்பட்ட தொடரிலும் மலேசியா சென்றிருந்த அணியிலும் இடம் பெற்றிருந்தமையுடன் கட்டார் நாட்டில் இடம் பெற்ற 2020 ஆம் ஆண்டிற்கான 19 வயதிற்குட்பட்ட ஆசிய தகுதிகாண் போட்டிகளிலும் பக்குபற்றியிருந்தனர். இதில் முதலில் ஆடும் பதினொருவர் அணியிலும் இவ்விரு வீரர்களும் இடம்பெற்றிருந்தனர்.

மேலுல் 47வது ஆசிய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சம்பியன்சிப் போட்டிக்காக இந்தோனேசியா செல்லும் இலங்கை 19 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணியில் மு.சதுர்சன் அவர்களும் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

இவ்வருடம் இடம்பெற்ற தேசிய ரீதியிலான தரம் 2,சமபோச கிண்ணம் மற்றும் மைலோ தொடர் ஆகிய முக்கிய தொடர்களில் பிரகாசித்துள்ள இவ்வீரர்கள் தேசிய ஜூனியர் அணிகளில் உள்வாங்கப்பட்டுள்ளமையுடன் தேசிய அளவில் 19 வயது தேசிய அணியில் வீரர்களின் எண்ணிக்கையில் கொழும்பு ஸாகிரா கல்லூரிக்கு அடுத்தபடியாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

பாக்கியநாதன் றெக்சன் மற்றும் பாக்கியநாதன் டேவிட் டாலுங்சன் ஆகிய இருவரும் சகோரரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய்?



வளர்ந்து வரும் நவீன உலகில் உணவு பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறை, சூழல்கள் மற்றும் கால நிலை மாற்றத்தினால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. பிறந்த குழந்தை முதல் முதியவர்கள் அனைவருக்கும் சர்க்கரை நோய் பாதிப்பு உருவாகிறது. ஒவ்வொரு வீட்டிலும் டிவி, கிரைண்டர், மிக்ஸி இருப்பது போல் சர்க்கரை நோயும் இருக்கிறது.

சாதாரணமாக முன்பு எல்லாம் வீட்டிற்கு வந்த விருதாளிகளிடம் 'எப்படி இருக்கிங்க?' – என்று கேட்பது மாறி 'உங்களுக்கு சர்க்கரை நோயின் அளவு எவ்வளவு இருக்கிறது' – என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். 35 வயதிற்குமேல் சர்க்கரை நோய் என்பது சாதாரணமாக மாறிவிட்டது.

முன்பெல்லாம் சர்க்கரை நோய் என்பது பணக்காரர்களுக்கு மட்டும் வரும் நோய் என்று கூறுவதுண்டு. ஆனால், இன்றைய காலகட்டத்தில் பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை அனைவருக்கும் சர்க்கரை நோய் இருக்கிறது. தினமும் காலையில் எழுந்து டீ, காபி குடிப்பதைப் போன்று, இன்சுலின் போட்டுக் கொள்வதும், மாத்திரிகைகள் எடுத்துக்கொள்வதும் நம் அன்றாட வாழ்வின் அங்கமாக மாறிவிட்டது. உலகில் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட நாடுகளில் மூன்றாவது இடத்தில் உள்ளது இந்தியா.

**சர்க்கரை நோய் இரண்டு வகைப்படும். முதல் வகை சர்க்கரை நோய் (சிறார் சர்க்கரை நோய்)**

**இரண்டாம் வகை சர்க்கரை நோய்**

இரண்டாம் வகை சர்க்கரை நோய் 35 வயதை கடந்தவர்களுக்கு ஏற்படும். இரண்டாவது வகை சர்க்கரை நோயானது உணவு முறைகள் மற்றும் வாழ்க்கை முறைகளினால் ஏற்படும் நோயாகும். அதாவது உடலுழைப்பு அதிகமில்லாத பணிகள் செய்வது, சர்க்கரை அதிகமாக உள்ள உணவுகளை அதிகமாக உட்கொள்வது, அதிகமான மன அழுத்தம், பதற்றம் ஆகியவற்றால் உருவாவது தான் இரண்டாவது வகை.

பிறக்கும் போது இன்சுலின் குறைபாடு உடையவர்களுக்கு முதல் வகை நீரிழிவு நோய் ஏற்படும். அவர்கள் அன்றாடம் இன்சுலின் ஊசி போட வேண்டும். அது தவறினால் கடுமையான விளைவுகள் ஏற்படும். முதல் வகை நீரிழிவு நோயை சிறார் வகை நீரிழிவு நோய் என்றும் அழைக்கலாம். ஏனென்றால் இந்த வகை நோய் பெரும்பாலும் சிறார்களையே தாக்கும். பெரும்பாலும் இந்நோய் 5 வயதுக்கு பிறகுதான் தோன்றும். ஆனால், சிலர் 30 வயதுக்கு பிறகும் இவ்வகை நோயைப் பெறுவதில்லை.

பொதுவாக சில குழந்தைகள் தூங்கவும், தண்ணீர் குடிக்கவும், உணவு உண்ணவும் மற்றும் அடிக்கடி சிறுநீர் கழிக்கவும் செய் வார்கள். ஆனால் இது சாதாரணமாக நடப்பது தான் என்று பெற்றோர்கள் கவனக்குறைவாக இருக்க வேண்டாம். அதிக மயக்கம், அதீத பசி, அடிக்கடி சிறுநீர் கழித்தால் அவை முதல் வகை நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள். இவ்வகை நோய்க்கான அறிகுறிகள் திடீரென குழந்தைகளிடம் தோன்றலாம். எனவே பெற்றோர்கள் கவனமாக இருப்பது அவசியம்.

முதல் வகை சர்க்கரை நோய்க்கான அறிகுறிகள் அடிக்கடி சிறுநீர் கழிப்பது, அதீத தாகம் எடுத்தல், அதீத பசி எடுத்தல், உடல் எடை குறைவு, உடல் சோர்வு, சுவாசிப்பதில் சிரமம், ஈஸ்ட் தொற்றுகள், திடீரென வித்தியாசமாக நடந்துகொள்ளுதல், கனமான சுவாசம், சுவாசிக்கும் போது முணுமுணுப்பது பழங்கள், இனிப்பு, மது போன்ற வாசனையை நுகர்தல், அதிக மயக்கம், ஆற்றல் இல்லாமை இந்த அறிகுறிகள் இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகி குழந்தைக்கு உடல் பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்து பார்க்கலாம்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமானால் இதயம், சிறுநீரகம், கண்கள், கால்களில் உள்ள ரத்தக் குழாய்களில் பாதிப்பு ஏற்படும். சிலருக்கு மூளைக்கு செல்லும் ரத்தக்குழாய் பாதிக்கப்பட்டு, பக்கவாதம் ஏற்படவும் வாய்ப்புள்ளது.



உங்கள் குழந்தைக்கு ஏற்கனவே முதல் வகை சர்க்கரை இருப்பது கண்டறியப்பட்டால், இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையும்போது சில அறிகுறிகள் வைத்து தெரிந்து கொள்ளாலாம். மங்கலான அல்லது இரட்டை பார்வை, தலைச்சுற்றல் மற்றும் தலைவலி, மயக்கம் அல்லது சோர்வு, வியர்த்தல், ஈரமான தோல், தீவிர அல்லது திடீர் பசி, பலவீனம், விரைவான துடிப்பு என்பன அவை.

குழந்தைகளுக்கு ஏன் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது என்பது அனைவரின் மனதிலும் ஒரு கேள்விகுறியாகவே இருக்கும். இது ஒரு ஓட்டோ இம்யூன் நோயாகத் தோன்றுகிறது. இது உடலில் பொதுவாக இன்சுலின் உருவாக்கும் செல்களைத் தாக்கி அழிக்கிறது.

பரம்பரை மூலமாக் சர்க்கரை நோய் வருவது என்பது குறைவான சதவீதம் மட்டுமே என்கிறார்கள் மருத்துவர்கள். கணையத்தால் இன்சுலின் சுரக்காத போது உடலுக்கு தேவையான இன்சுலினை வெளியில் இருந்து செலுத்த வேண்டும். இந்த பாதிப்பு இருந்தால் மாத்திரைகளுடன் ஊசியும் பரிந்துரைக்கப்படும். இன்சுலின் அளவுகள் இரத்த சர்க்கரை அளவை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அவற்றின் இரத்த சர்க்கரை அளவுகள், உணவுகள் மற்றும் செயல்பாட்டு நிலைகளையும் கவனமாக கண்காணிக்க வேண்டியது அவசியம். குழந்தைகள் பாதிக்கப்படும் இந்த முதல் வகை சர்க்கரை நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்துவிட்டால் சிகிச்சையும் எளிதாக இருக்கும். *



# ஒரு வாசகனின்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1923 இல் காரைநகருக்குச் சென்ற சேர்.பொன். இராமநாதன் 'காரைதீவு இனி காரைநகர் என அழைக்கப்படுவதாக' என்று சொன்னதாகச் சொல்லப்படுவது உண்டு.

**புதினங்கள்**

1977 காலகட்டத்தில், வீரகேசரி பிரசுரம் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட புதிய எழுத்தாளர்கள் வெளியே தெரியவந்தனர். அதற்கு அவர்களுடைய விநியோகபலமும் காரணம். ஆனால் அந்தக் காலப்பகுதி நூறுவீதம் நன்மை தந்தது என்று சொல்ல முடியாது. உள்ளூர்ப் பிரசுரங்கள் வந்தன, அவ்வளவு தான். அதில் குறிப்பிடத்தக்க சில நாவல்களும் வெளிவந்திருக்கின்றன.

இயக்கங்களுக்கு முன்னதாகவே இந்தக் காலகட்டத்தில் மக்களைக் கவர்ந்த தலைவர் என்றால் அது அமிர்தலிங்கம் தான். நடத்தை, ஆளுமை, பேச்சாற்றல், துணிகரம் என்று எல்லாவிதத்திலேயும் அவர் ஒரு முன்னோடி. அந்தக் காலகட்டத்தில் தமிழீழக் கோரிக்கை தீவிரவாதமான கோரிக்கையாகக் கருதப்பட்டாலும் அதன் பின்னணியில் நிகழ்ந்த கலவரங்கள், சர்வதேசச் சூழல்கள் என்பவற்றின் காரணமாக அதன் பின்னரே ஆயுதப்போராட்டம் உருவாகத்தொடங்கியது. ஒவ்வொரு இயக்கங்களாக அவை உருவான நேரத்தில் எங்களுடைய வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது.

இக்காலப்பகுதியில் இடது சாரிகளே ஆதிக்கம் செலுத்தி வந்தனர், முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கைலாசபதி, சிவத்தம்பி போன்றோரும் மிகவும் செல்வாக்குடன் இருந்தனர். அவர்கள் தேசிய இனப்பிரச்சினையை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அதை படுபிற்போக்குத்தனமான ஒன்றாகவே வர்ணித்தனர். இதன் மூலம் சிங்களப் பேரினவாதத்திற்கு வக்காலத்து வாங்கினர். பின்னர் சிவத்தம்பி தாங்கள் விட்டதவறை ஏற்றுக்கொண்டார்.

இந்தக் காலத்தில் இவர்களின் அங்கீகாரத்திற்கென்றே ஒருசாரார் எழுதிக்கொண்டிருந்தனர். கைலாசபதியோ சிவத்தம்பியோ ஓகே பண்ணினால் அதுதான் இலக்கியம் என்ற போக்கு இருந்தது. ஆனால் அவர்களால் சிறந்த இலக்கியப்படைப்புக்களை அடையாளம் காணமுடியவில்லை. தங்களை மெத்தப்படித்தவர்களாக நினைத்துக்கொண்டு மகாகவி, மு.தளையசிங்கம் போன்ற இன்னும் பலரையும் தமது நிறுவனமயப்பட்ட சிந்தனையாலும் 'இசங்க'ளாலும் நிராகரித்தனர். இதன்போது, இதற்கான எதிர்க்குரலாக எஸ்.பொ திகழ்ந்தார். அலை சஞ்சிகையும் தனித்து நின்று இவர்களின் ஆதிக்கத்திற்கு எதிராகக் கலகக்குரலாக ஒலித்தது. எங்களுக்குத் தெரிந்து, இப்படியும் ஒரு பார்வை இருப்பதை அலை சஞ்சிகை மூலம்தான் அறிந்தோம்.

அதேவேளை, 1977 களில் இருந்த கலவரச்சூழல் தமிழ்மக்களின் எழுச்சியுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக படைப்பாளிகளைச் சிதறடித்தது. நாடகத்துறையில் பேராசிரியர் வித்தியானந்தனின் பங்களிப்பு முக்கியமானது. சிங்களப்பகுதிகளில் தேசிய நாடகத்தின் உருவாக்கத்திற்குச் சமமாக தமிழ்த்தேசிய நாடக உருவாக்கத்திற்காக ராவணேசன் போன்ற நாடகங்களை பயன்படுத்தினர். எமது கிராமங்களிலும் வெடியரசன், பூதத்தம்பி போன்ற நாடகங்கள் ஆடப்பட்டன. மக்களாலும் ரசிக்கப்படன.

உண்மையிலேயே ஆயுதப்போராட்டம் ஒன்றிற்கான பண்படுத்தப்பட்ட சூழல் இங்கே இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பினர் பிரசாரத்தில் அதிக கவனம் செலுத்தவில்லை . ஆயிரம் கூட்டங்கள் கொண்டு சேர்க்காததை ஒரு தாக்குதல் செய்துவிடும் என்று சொன்னார்கள், அதையே கடைசி வரையும் செய்தார்கள்.

**நிகழும் சருக்கம்**

புதிதாக இப்பொழுது எழுதுகிறவர்கள் நல்லா எழுதுகிறார்கள். 1977 வரை பெரும்பாலும் பிரசாரப் படைப்புக்கள்தான் வெளிவந்தன. சரியான படைப்பு வறுமை. கிட்டத்தட்ட நல்ல படைப்புகள் மருந்துக்கும் இல்லாத நிலைதான் தொடர்ந்தது. இதற்கு இலங்கை இடதுசாரிகளும் ஒரு காரணம். அவர்கள் பெரும்பாலும் எரியும் பிரச்சினைகளைத் தவிர்த்தனர். கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்றோரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் கொங்கிரீட் மாதிரி எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வந்தனர். யுத்தகளங்களிலிருந்து போனவர்கள் நனவிடை தோய்தல் எழுதுகிறார்கள் என்று விமர்சிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் உண்மையாக அப்பிடி நினைவு உள்ளவர்கள்தான் அதை எழுதவேண்டும், அவர்களின் மன அவசத்தை அவர்கள்தான் வெளிப்படுத்தவேண்டும்.

உலகம் பூராவும் யுத்தகளங்களிலிருந்துதான் மகத்தான இலக்கியங்கள் பிறந்திருக்கின்றன. அதிலும் இது ஒரு சிறியசமூகம், சுயநலம் கொண்டசமூகம், அதிகாரத் ல்திற்கு ஒத்தோடும் சமூகம், இதிலிருந்து மாற்றாக சிந்திப்பவர்களையும் ஒத்தோடிகளாக்கவே பலர் விரும்புகிறார்கள்.

யோ.கர்ணனின் கொலம்பஸின் வரைபடம் கடைசிக்கட்ட வெளியேறலை மிகச்சிறப்பாக வெளிக்கொண்டுவந்த படைப்பு. அந்தக்காலத்து படைப்புக்களைவிட இப்ப இளம் ஆட்கள் எழுதுவது 'வேர்த்' ஆனது.

எனது ஆதங்கம் என்னவென்றால் போருக்கு முதலிலும் நடுவிலும் போனவர்கள்தான் இப்போது உபதேசம் செய்ய திரும்பி வருகினம், இவர்களின் ஒரு பக்கக் கருத்து நிலையால் தமிழ் மக்களின் நியாயங்கள் பிழையாகப் பரப்பப்படுகின்றன.

வாசிப்பு உங்களை உருவாக்குவதில் என்ன பங்களிப்பு செய்திருக்கிறதென ஒருவர் கேட்டால், வாசிப்பு என்னை உருவாக்கியதன் விளைவே என்னை நோக்கிய இந்தக் கேள்வி என்பதே எனது பதிலாக இருக்குமோ தெரியவில்லை . ஆனாலும் நேர்கோட்டில் சொல்வதானால், நான் நானாக இருக்கவும் பத்தோடு பதினொன்றாக இல்லாமல் இருக்கவும், என்னில் மூழ்காமல் என்னிலிருந்து மீளவும் வாசிப்பு உதவுகிறது.

கடும் சுகவீனத்திலிருந்து மீண்டு தற்போதைய வாழ்க்கையை மேலதிக போனஸாக உணர்கையில் இசங்கள், கோட்பாடுகள், சுமைகள் எதுவுமின்றி வெள்ளைமனதுடன் நவீன இலக்கியத்திற்குள் பிரவேசிக்கும் புதிய இளந் தலைமுறையினருடன் சேர்ந்து பறக்க இறக்கைகளை என்னில் உருவாக்க முயற்சி செய்கிறேன். *

# நடால் அபார வெற்றி!



ஆண்களுக்கே உரித்தான ரென்னிஸ் தொடரான ஏ.ரீ.பி. ரென்னிஸ் தொடரில், உலகின் முதல்நிலை வீரரான ரபேல் நடால் வெற்றி பெற்றுள்ளார்.

இதில் ஆண்ட்ரே அகாஸி குழுவில், நடைபெற்ற போட்டியொன்றில், உலகின் முதல்நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால், உலகின் ஆறாம் நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாசை எதிர்கொண்டார்.

உச்சப் பரபரப்பை ஏற்படுத்திய இந்தப் போட்டியில், முதல் செற்றே இரசிகர்களை உச்ச விறுவிறுப்புக்குக் கொண்டுச் சென்றது.

டை பிரேக் வரை நகர்ந்த இப்போட்டியில், முதல் செற்றைக் கடுமையாகப் போராடி ஸ்டெபீனோஸ் ஸிட்ஸிபாஸ், செற்றை 7 – 6 எனக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஆக்ரோஷமாக மீண்டெழுந்த ரபேல் நடால், அடுத்த இரண்டு செற்றுகளையும் 6 – 4, 7– 5 என கைப்பற்றி வெற்றி பெற்றார். (ஐ)

# அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் வெற்றி



ஆண்களுக்கே உரித்தான ரென்னிஸ் தொடரான ஏ.ரீ.பி. டென்னிஸ் தொடரில், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் வெற்றி பெற்றுள்ளார்.

ஆண்ட்ரே அகாஸி குழுவில் நடைபெற்ற இன்னொரு போட்டியில், உலகின் 7ஆம் நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்ஸாண்டர்ஸ்வெரவ்வும், உலகின் நான்காம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனில் மெத்வதேவும் மோதிக் கொண்டனர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல்செற்றை அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் 6 - 4 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், ஆக்ரோஷமாக சீறி எழுந்த டேனில் மெத்வதேவ், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ்வுக்கு கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதனால் செற், டை பிரேக் வரை நீண்டது. இதில் இறுதி வரை விட்டுக்கொடுக்காது போராடிய அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் செட்டை 7 - 6 எனக் கைப்பற்றி வெற்றி பெற்றார்.

# 10 ஆவது முறை டக்கவுட் முறையில் ஆட்டமிழந்தார் விராட் கோஹ்லி!



இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி, டெஸ்ட் கிரிக்கெட்டில் பத்தாவது தடவையாக ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்துள்ளார்.

இந்தூர் மைதானத்தில் நடைபெற்றுவரும் பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே, இவ்வாறு கோஹ்லி ஆட்டமிழந்துள்ளார்.

இதன்மூலம் கோஹ்லி, சில்வர் டக்கவுட் முறையில் ஆட்மிழந்த நான்காவது சந்தர்ப்பமாக இது பதிவு செய்யப்பட்டது.

மேலும், விராட் கோஹ்லி நான்கு முறை கோல்டன் டக்கவுட் அதாவது முதல் பந்திலேயே ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்துள்ளார்.

ஒரு முறை நான்காவது பந்திலும் இன்னொரு முறை 11ஆவது பந்திலும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்துள்ளார்.

இவற்றில் 6 முறை பிடியெடுப்பு கொடுத்தும் 3 முறை எல்.பி.டபிள்யூ. முறையிலும் 1 முறை போல்ட் ஆகியும் ஓட்டமெதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்துள்ளார்.

7000 டெஸ்ட் ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் குறைந்த இன்னிங்ஸில் 10 முறை டக் அவுட் ஆன வீரர் விராட் கோஹ்லிதான். 140 இன்னிங்ஸிலேயே இந்த எண்ணிக்கையை எட்டியுள்ளார். (ஐ)

# இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக மிக்கி ஆர்தர்?

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளராகச் செயறப்பட்ட மிக்கி ஆர்தர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு இலங்கை கிரிக்கெட் சபை நிறைவேற்றுக் குழு ஒப்புதல் அளித்துள்ளபோதும், இந்த நியமிப்பு குறித்து இன்னமும் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.



இலங்கைகிரிக்கெட் அணியின் உலகக் கிண்ணத் தோல்விக்கு பின்னர், கடும் அதிருப்தியடைந்திருந்த இலங்கை கிரிக்கெட் சபை, நியூசிலாந்து சுற்றுப்பயணத்துக்கு முன்னர் அணியின் தலைமைபயிற்சியாளராக இருந்த சந்திக்க ஹத்துருசிங்கவைக் கட்டாயத்தின் அடிப்டையில் நீக்கியது.

இதற்கு பின்னர், முன்னாள் வேகப்பந்து பயிற்சியாளர் ருமேஷ் ரத்னாயக்க இலங்கை அணியின் இடைக்காலத் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

தற்போது, பயிற்சியாளராகச் செயற்பட்டுவரும் ருமேஷ் ரத்னாயக்க, எதிர்வரும் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு பின்னர், தனது பதவியை துறப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்பின்னரே 51 வயதான தென்னாபிரிக்கப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், பயிற்சியாராக நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சியாளராக நியமிக்கப்படும் மிக்கி ஆர்தர், 2021ஆண்டு ஐ.சி.சி. ரி – 20 உலகக் கிண்ண தொடர் முடியும் வரையான காலம் வரை அணியின் பயிற்சியாளராகச் செயற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

முன்னதாக2005ஆம்ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை தென்னாபிரிக்கப் பயிற்சியாளராகச்செயற்பட்ட ஆர்தர் 2011ஆம் ஆண்டு முதல் 2013ஆம் வரை ஆஸ்திரேலியப் பயிற்சியாளராகவும், மூன்று ஆண்டு ஒப்பந்தமாக பாகிஸ்தான் பயிற்சியாளராகவும் செயற்பட்டுள்ளார்.

ஆர்தரின் பயிற்சியின் கீழ் ரி – 20 தரவரிசையில் பாகிஸ்தான் முதல் நிலை அணியாக முன்னேற்றம் கண்டதோடு, 2017ஆம் ஆண்டு ஐ.சி.சி. சம்பியன்ஷிப் கிண்ணத்தையும் வென்றது. (ஐ)



# ஐந்து வீரர்களை விடுவித்த சென்னை சுப்பர் கிங்ஸ்

ஐ.பி.எல். 2020 வீரர்கள் ஏலம் வரவிருப்பதையடுத்து சென்னை சுப்பர் கிங்ஸ் 5 வீரர்களை விடுவித்துள்ளது.

சாம் பில்லிங்ஸ், சைதன்ய பிஷ்னாய், துருவ் ஷோரி, டேவிட் வில்லே, மோஹித் சர்மா ஆகிய வீரர்களையே சி.எஸ்.கே. விடுவித்துள்ளது.

இந்த ஐந்து வீரர்களை விடுவித்ததன் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸுக்கு 12 கோடி ரூபா கிடைத்துள்ளது. இதனால் 12 கோடி ரூபாவுடன் இந்த வருட ஏலத்தை அந்த அணி எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)



# அதிசங்கள் நிறைந்த பூமி

நாம் வாழும் இந்த பூமியானது பல அதிசயங்கள் நிறைந்ததாகும். அதிசயங்கள் என்பதை விட நம் பூமி மட்டும்தான் ஆசீர் வதிக்கப்பட்ட கிரகமாகும். ஏனெனில் தற்போது வரை இங்கு மட்டும்தான் உயிரினங்கள் வாழ ஏற்ற சூழல் உள்ளது. அனைத்து வகை உயிரினங்களும் வாழ ஏற்ற சூழல் இருக்கும் இந்த பூமியில் மொத்தம் எத்தனை உயிரினங்கள் வாழ்கின்றன என்பது இன்றுவரைக் கண்டறியமுடியாத புதிராக இருக்கிறது.

நாம் வாழும் பூமியைப் பற்றி நாம் எவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறோம் என்றால் அது மிக மிகக் குறைவுதான். இந்தப் பிரபஞ்சம் பற்றியும், பூமி பற்றியும் நாம் தெரிந்து கொள்ளத் தொடங்கி விட்டால் நம்மால் தூங்கவே முடியாது. ஏனெனில் அவ்வளவு அதிசயங்களும், புதிர்களும் நிறைந்தது இந்த அண்டம். பிரபஞ்சம் பற்றி பிறகு தெரிந்துகொள்ளலாம், இந்த பதிவில் பூமி பற்றி சில ஆச்சரியமான தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.



பூமி வட்டமானது அல்ல பூமி கோள வடிவத்தில் இருக்கிறது, ஆனால் அதன் ஈர்ப்பு விசை காரணமாக பூமி சரியான வட்ட வடிவத்தில் இல்லாமல் இருக்கிறது. உண்மையில் பூமத்திய ரேகையை சுற்றி ஒரு வீக்கம் உள்ளது. பூமியின் துருவ ஆரம் 3,949.99 மைல்கள், அதன் பூமத்திய ரேகை 3,963.34 மைல்கள்.

பூமியின் பெயர் பூமியை ஆங்கிலத்தில் எர்த் என்று அழைப்பார்கள். இந்த பெயருக்கு பின்னால் கூட ஒரு சிறப்பு உள்ளது. நமது சூரிய மண்டலத்தில் உள்ள மற்ற ஒவ்வொரு கிரகத்திற்கும் கிரேக்கம் அல்லது ரோமானிய கடவுளின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆனால் பூமி என்ற சொல் ஆங்கிலோ - சாக்சன் வார்த்தையான எர்டாவிலிருந்து வந்தது, அதாவது தரை அல்லது மண், அதாவது 1,000 ஆண்டுகள் பழமையானது என்று கருதப்படுகிறது. ஒரு நாளில் 24 மணி நேரம் இல்லை. பகலில் போதுமான மணி நேரம் இல்லை என்று மக்கள் அடிக்கடி கூறுகிறார்கள், அவர்கள் சொல்வது சரிதான். ஏனெனில் ஒரு நாளில் 24 மணி நேரம் இல்லை. பூமி அதன் அச்சில் சுழல எடுக்கும் உண்மையான நேரம் 23 மணிநேரம், 56 நிமிடங்கள் மற்றும் 4 வினாடிகள் ஆகும். இதைத்தான் ஒரு பக்க நாள் என்று அழைக்கப்படுகிறது.



### பூகம்பம்

இயற்கை ஏற்படுத்தும் பேரழிவுகளின் பூகம்பம் முக்கியமானதாகும். ஒரு வருடத்தில் மிதமானது முதல் வலிமையான நில நடுக்கம் வரை என பல நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால் உண்மை என்ன வெனில் ஒரு வருடத்திற்கு 1 மில்லியனுக் கும் அதிகமான நிலநடுக்கங்கள் ஏற்ப டுகின்றன. ஆனால் அது மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்படுவதில்லை என்பதுதான் ஆறுதல்.

உலகின் மிக ஆழமான ஏரி முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் உள்ளது, அது பைக்கால் ஏரி. இதன் நீளம் 400 மைல், சுமார் 30 அகலம், ஆனால் அதன் ஆழம் ஒரு மைல் ஆகும், கிட்டதட்ட 5371 அடி ஆகும். இதற்கு அடுத்தடுத்த இடத்தில் இருக்கும் ஐந்து ஏரிகளை இதற்குள் அடைத்துவிடலாம். உலகின் மிகப்பெரிய கடல் காஸ்பியன் கடல் ஆகும். இது ஈரான் மற்றும் ரஷ்யாவின் எல்லையில் உள்ளது.

### உப்புக் கடல்

பூமியில் இருக்கும் அனைத்துக் கடலிலும் இருக்கும் நீரை ஆவியாக்கி அதில் இருக்கும் உப்பை கொண்டு பூமியின் நிலப்பரப்பை மூடினால் பூமியின் நிலப்பரப்பில் இருந்து கிட்டதட்ட 500 அடி வரை மேல்நோக்கி நிரப்பலாம். இதன் அளவு ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

கடல் நீரின் உப்பு சுவைக்கான காரணம் மழைநீர்தான்கடலுக்குச் செல்கிறது ஆனால் கடல் நீர் மட்டும் ஏன் உப்புசுவையுடன் இருக்கிறது என்று சிந்தித்து உள்ளீர்களா? மழை நீர் வளிமண்டலத்தில் நுழையும்போதுகாற்றில் இருக் கும் கார்பன்டை ஆக்ஸைடுடன் சேர்வ தால் அதற்கு சிறிதளவு அமி லத்தன்மை ஏற்படுகிறது. மழை பாறை மற்றும் கற்கள் மீது பெய்யும்போது, அயனிகளாக பிரிக்கும் கனிம உப்புகளை வெளியிடுகிறது. ஆறு மற்றும் ஏரி போன்றவற்றில் இந்த அமிலத் தன்மையும், கனிம உப்புகளும் குறைவாக இருக்கும். அதனால் நம் மால் உப்புச்சுவையை உணரமுடிவதில்லை. ஆனால் அனைத்து நீரும் கடலில் சென்று கலக்கும்போது அதிகளவு அயனி உப்புகள் வெளிப்படுவ தால் தான்கடல்நீரில்மட்டும்உப்புச்சுவையை உணர முடிகிறது.

### பாலைவனம்

பொதுவாக பாலைவனம் என்றாலே மணலால் நிரப்பப்பட்டது என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் அனைத்து பாலைவனமும் மணலால் நிரப்பப்பட்டது அல்ல. அதில் 85 சதவீதம் பாறைகளால் ஆனது. உலகின் மிகப்பெரிய பாலைவனமான சஹாரா ஆப்பிரிக்காவின் 1/3 பகுதியை நிரப்பக்கூடும்.

வளிமண்டலத்தின் பல அடுக்குகள் மீசோஸ்பியர், அயனோஸ்பியர், எக்ஸோஸ்பியர் மற்றும் தெர்மோஸ்பியர் உள்ளிட்ட நமது கிரகத்தை மூடுகின்றன. ஆனால் இது வெப்பமண்டலம், கிரகத்திற்கு மிக நெருக்கத்தில் உள்ளது. இது நம் வாழ்க்கையை ஆதரிக்கிறது. உண மையில், மிக மெல்லியதாக அடுக்கான இது பூமியில் இருந்து சுமார் 16 கிலோமீற்றர் உயரத்தில் உள்ளது.

எரிமலை பூமியின் மற்றொரு அற்புதமான அம்சம் என்னவென்றால், உலகளவில் கிட்டத்தட்ட 500 எரிமலைகள் உள்ளன. பூமியின் 80%, மேற்பரப்புக்கு மேலேயும் கீழேயும் காணப்படுவது எரிமலை மண்ணால் ஆனவை.





# அயோத்தி பற்றிய சுவாரஸ்யமான உண்மைகள்!

இந்தியாவின் தலையாயபிரச்சனைகளில் ஒன்றாக அயோத்தி விவகாரம் இருந்தது. இந்தியாவின் உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ள பைசாபாத் மாவட்டத்தைச் சேர்ந்தது தான் அயோத்தி. இந்த நகரம் சரயு ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அயோத்தி என்றதுமே பலருக்கும் நினைவிற்கு வருவது ராமர் கோவிலும், பாபர் மசூதியும் தான். பல வருடங்களாக அயோத்தி வழக்கு நிலுவையில் இருந்தது. சமீபத்தில் தான் திடீரென்று இதன் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தகைய அயோத்தி நகரத்தைப் பற்றி இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் கட்டாயம் தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. இக்கட்டுரையில் அயோத்தி நகரத்தைப் பற்றிய சில சுவாரஸ்யமான உண்மைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதையும் கொஞ்சம் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

உண்மை 1 - விஷ்ணுவின் அவதாரமான ராமர் பிறந்த ஊர் தான் அயோத்தி. எனவே இந்தியாவில் அயோத்தி ஒரு புனிதமான நகரமாக கருதப்படுகிறது.

உண்மை 2 - புத்த, சமண, சமஸ்கிருதம், கிரேக்கம் மற்றும் சீனஆதாரங்களின்படி, அயோத்தி நகரத்தின் பழையபெயர் சாகேதா, இது அதன் அற்புதமான கட்டடங்களுக்கு ஒத்திருக்கிறது.

உண்மை 3 - பழங்கால இந்திய ராஜ்ஜியங்களில் ஒன்றான கோசல ராஜ்ஜியத்தின் தலைநகராக இருந்தது அயோத்தி தான். இந்த பெருமைஎப்போதுமே இதற்கு உண்டு.

உண்மை 4 -அயோத்தியின் பெருமை அறிந்த பின், இந்தோனேசியாவில் உள்ள யோகயாகார்த்தா மற்றும் தாய்லாந்தில் உள்ள அயுதயா போன்ற நகரங்களுக்கு அயோத்தி எனப் பெயரிடப்பட்டது என்பது தெரியுமா?

உண்மை 5- சில வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி, ஒரு குப்தா ஆட்சியாளர் (அநேகமாக ஸ்கந்தகுப்தா) தான் தனது தலைநகரை சாகேதாவுக்கு மாற்றினார். மேலும் அவர் தான் சாகேதாவின் பெயரை 4 ஆம் நூற்றாண்டில் அயோத்தி எனமாற்றினார் என்றும் கூறுகின்றனர்.

உண்மை 6 - பயணிகள் அடிக்கடி வரும் நகரமாக அயோத்தி இருந்ததால், கௌதம புத்தர் மற்றும் மகாவீரர் போன்ற சுவாமியர்களுக்கு இது ஒரு முக்கியமான மையமாக மாறியது.

உண்மை 7-ராஜா ஹரிஷ்சந்திரா அல்லது மன்னர் ஹரிச்சந்திராவின் பிறப்பிடமாக அயோத்தி கருதப்படுகிறது. இவர் இந்தியாவில் சத்தியத்தின் சின்னமாகக் கருதப்படுபவர். இவர் தனது கனவில் ஒரு முனிவருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, தனது ராஜ்ஜியத்தை விட்டுக் கொடுத்து, குடும்பத்தை விற்று, ஓர் அடிமையாக ஆனார்.

உண்மை 8 - தென் கொரியாவிற்கும், அயோத்திக்கும் ஒரு மரபணு தொடர்பு உள்ளது தெரியுமா? ஆம், கொரியாவின் மிகப்பெரிய வம்சத்தின் இளவரசியான ஹியோ ஹ்வாங் - ஓகே அயோத்தியில் கடல் வழி பயணித்தவரின் மகளாகும். இவர் கொரியாவின் காரா வம்சத்தின் ராஜாவான கிம் சுரோவை மணந்தார்.

உண்மை 9 -11 ஆம் நூற்றாண்டில் கஹாதவால வம்சத்தால் வைணவத்தை ஊக்குவித்ததன் மூலம், அதாவது வைணவத்திற்கு ராம வழிபாட்டு முறையைக் கொண்டு வந்ததன் மூலம், அயோத்தி இந்தியாவில் ஒரு முக்கியமான புனித யாத்திரை மையமாக உருவெடுத்தது.

உண்மை 10 -அயோத்தி மற்றும் கிம்ஹே (தென் கொரியாவில்) நகரங்கள் மார்ச் 2001 இல் சகோதரி நகரங்களாக மாறினநவம்பர் 2014 இல் அயோத்தி மற்றும் ஜங்காபூர் (நேபாளத்தில்) நகரங்கள் சகோதரி நகரங்களாக மாறின.



**கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் தலைவர்களான அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பிரதி அமைச்சர் அமீர் அலி, கோனேஸ்வரன் எம்.பி, விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா) ஆகியோர் நேற்று வாக்களிக்கச் சென்ற போது எடுக்கப்பட்ட படங்கள்...**



# அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தினாலேயே நாட்டில் அமைதியான தேர்தல் சாத்தியமானது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெருமிதம்



கொழும்பு,நவ.17

நல்லாட்சி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் மூலமாகவே சுதந்திரமானதும், அமைதியானதுமான ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடிந்திருக்கிறது என்று தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸவின் வெற்றியின் பின்னர் கடந்தகால செயற்திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

நேற்று சனிக்கிழமை காலை எட்டாவது ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக நல்லாட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவை எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமாக செயற்பட்டன.

அதன் ஓரங்கமாகவே, இம்முறை ஜனாதிபதித் தேர்தல் எவ்வித தலையீடுகளுமின்றி சுதந்திரமானதாகவும், நியாயமான முறையிலும் அமைதியாக நடைபெற்று முடிவடைந்திருக்கின்றது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவின் வெற்றியின் பின்னர், நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் அனைத்தும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று நம்புகின்றேன். - என்றார்.

# பலாங்கொடையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க முற்பட்ட சந்தேக நபர் கைது

தேர்தல் சட்டங்களை மீறி ஒரு கட்சியினருக்கு ஆதரவாக துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவதற்கு முயன்ற சந்தேகநபர் ஒருவரை பலாங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 348 துண்டு பிரசுரங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 26 வயதான சந்தேகநபர், பலாங்கொடை - வட்டவல ஸ்ரீ அக்போதி வித்யாலயத்தின் வாக்கு மையம் அருகே கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரைப் பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேணர்ஸ்
கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS
தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை


வடமாகாண
மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல,
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்